653

30 OCT
MADRAS

உ
சிவமயம்.

அம்பரிஷி சரித்திரமென்னும்

நாரதகெருவபங்க நாடகம்.

இரண்டாம் பாகம்.

இவை
கூடலூர் தொண்டமாநத்தம்
மா. கு. ஜம்புலிங்க படையாச்சி
மா. கு. கோவிந்தசாமி படையாச்சி
இவர்களால் இயற்றியது.

மதுராந்தகம்
முத்துவேலுப்பிள்ளை அவர்களிடம்
சகலசுதந்தரமும்பெற்றுக்கொண்டு
ம. தி. முருகேச முதலியாரால்
சென்னை,
வாணீ விலாசம் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1928 [அணா 5

ரிஜிஸ்டர் காப்பிரைட்

O-2MJM1, A
N28.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 OCT 1928
MADRAS

உ

சிவமயம்.

அம்பரிஷி சரித்திரமென்னும்

நாரதகெருவபங்க நாடகம்.

இரண்டாம் பாகம்.

இவை

கூடலூர் தொண்டமாநத்தம்,

மா. கு. ஜம்புலிங்க படையாச்சி

மா. கு. கோவிந்தசாமி படையாச்சி

இவர்களால் இயற்றியது.

மதுராந்தகம்

முத்துவேலுபிள்ளை அவர்களிடம்

சகல சுதந்தரமும் பெற்றுக்கொண்டு,

ம. தி. முருகேச முதலியாரால்

சென்னை

வாணீ விலாசம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1927. [அணா-5.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

சிவமயம்.

அம்பரிஷி சரித்திரமென்னும்

நாரத கெருவபங்க நாடகம்

காப்பு வஞ்சி.

அம்பரீஷன்சரிதை அவனியில்பான்புகல
நம்பிடுவோர்குரு நற்கணபதிகாப்பு.

விநாயகர் துதி.

அரசனும்அம்பரீஷன் அருஞ்செல்விஸ்ரீமதிக்காய்
சரசமாய்நாரதன் தான் தவமுனிபர்வதனுங்கூடி
முரசகேதனனும்மூர்த்தி முகுந்தனுல்பங்கப்பட்ட
வரிசைநாடகத்தைப்பாட வரந்தருங்கணேசாபோற்றி.

பலதேவர் துதி.

சித்தியாம்ஏகதந்தன் சிவகண்டாயுதன்இடும்பன்
பத்தவதாரன்ஈசன் பார்வதிவீரபத்திரன்
வித்தையையளிக்கும்வாணி விடைநந்தி அய்யனை
சுத்தமாய்துதித்துபோற்றி தூயவன்வணங்கினேனே.

அவையடக்கம்.

பாலுடன்நீர்கலந்து பருகிட அன்னத்தின்முன்
கோலமாய்வைத்தால்பாலை குடித்துமேநீரைநீக்கும்
போலதை அடியேன்செய்த பெரும்பிழைதன்னைநீக்கி
சீலமாய்பொருள்கொள்ள சிரியவன்வணங்கினேனே.

148390
14839
30 OCT 1928
MADRAS

அம்பரீஷராஜன் வருகிற கவி.

மணிமுடியதுதரித்து மந்திரிதங்களோடு
அணியணியாகயானை சேனைகள்நெருங்கியோங்க
பணிவுடன்மன்னரெல்லாம் பலவிதமாகதுட
துணிவுடன்அம்பரீஷன் தொல்சபைவருகின்றேனே,

தரு.

அம்பரீஷராஜன்வந்தேன்   நல்ல அனுதினம்
அரிபாதம்கனமுடன்நினைந்து அம்பரீஷராஜன்வந்தேன்
செப்புமழகும்பெற்ற   திரேகமதுவும்தன்ன
சம்பிரமுடன்மந்திரி   தானேதுதித்துடன்ன

கரு   சற்குணமாகிய   நற்குணமுள்ளோர்
திக்குளோர்போற்றிடும்   அக்குணம்வாய்ந்த   அம்

சிரசில்மகுடம்மின்னவே சேல்விழிமாதர்கள்நேரினிலாட
முரசம்டமாம்   பண்ணவே
அரசர்மிகநெருங்கி   அவனியில்லடிதாழ
வரிசைவரிசையாக   வந்துசேனைகள்சூழ

கரு   வாத்தியகோஷ்டங்கள்   வத்தியேமுழங்க
சாத்தியேஅரிநாமம்   நேர்த்தியாய்வழங்க   அம்

பத்தவதாரமூர்த்தியாம் பரந்தாமன்பதமதை
நிரந்தரமாய்தினம் சுத்தமதாய்துதித்துமே
நெத்திதன்னில்நாமம் சுத்தமுடனிலங்க
மெத்தவேஉலகினில் பத்தனென்றுதுலங்க

தரு மெல்லியர்வல்லியர் நல்லவரெல்லாம்
எல்லையில்துதித்துமே அல்லலைசொல்ல அம்

கதிரவன்குலத்துவேந்தனும் கனமுள்ளதிருச்சங்கு
மணமகிழ்பாலனும் அதிசிதஇவனேதீரனும்
பதிபுகழரசரில்பராக்கிரமம் மிகப்பெற்ற
சதிருள்ளவேந்தனென்று சகத்திலெவரும்துற்ற

தரு சந்ததம்அரிபாதம் சிந்தையாய்துதிபுரி
மைந்தனென்றுஉலகில் சுந்திரபதம்பெற அம்

ஷை கவி.

திக்குகளெல்லாந்தாங்கும் சேடன்மேல்பள்ளிக்கொள்ளும்
சக்கரம்சங்கிஞெடு சாரங்கம்கெதையுங்கொண்ட
பக்குவமாகஅந்த பத்தவதாரமூர்த்தி
மிக்கவேகண்ணனின் தன்றிருபாதம்வணங்கினேனே.

ஷை கவி.

வல்லமைதனில்மிகுத்து வண்மையாய்பமைச்சவேலை
சொல்லுமுன்செய்யுமெந்தன் சுந்தராதுமாதவே
அல்லல்கள்வருகாமுன்னம் அரிந்துரைசெய்புமந்திரி
நல்லவன்சத்தியசிலன் நருஞ்சபையழைத்துவாரீர்.

மந்திரி சத்தியசிலன் வருகிற கவி.

அகத்தினில்அரிபாதத்தை அனுதினம்மறவாசிலன்
சகத்தினில்அம்பரீஷன் சபிதியில்லமைத்தசேதி
மகுத்துவமறிவோமென்று மதிவிதிதனையரிந்த
செகத்தினில்சத்தியசிலன் சீர்சபைவருகின்றேனே.

மந்திரி வருகிற தரு.

தந்திரசுந்திரமந்திரியாகிய சத்தியசிலன்வந்தேன்
அரசன்பக்கல்சத்திய சிலன்வந்தேன்
விந்தையாய்வுலகினில் வந்திடும்சேதியை
முந்திஅரிந்துரை தந்திரமிகுத்த தந்

கலிக்கத்துராவுடன் சொலிக்கமணியணி
அலிக்கிகடைகடந்து அரசன்சபைநாடி தந்
அதிவிதஉலகினில் சதுர்விதஉபாயங்கள்
விதியினுலசிந்துரை மதியதனைக்கொண்ட தந்
அன்பான அரசனும் அழைத்தசேதிஇன்று
இன்பமுடன்சென்று நன்றறிவேனே தந்

மந்திரி சத்தியசிலன் கவி.

அவனியில்புகழுகின்ற அயோத்தியின்னரசாய்நின்று
தவருதவில்லாஉந்தன் தாளிணைபோற்றிபோற்றி
பவமதையொழிக்கமாலின் பதமதைதுதித்தஎன்னை
கவனமாய்யழைத்தசேதி கடுகெனயுரைசெப்வீரே.

மந்திரி வசனம்.

அரசே! வந்தனம்! அழைத்தசேதி யாது புகல்வீர்.

அம்பரீஷன் வசனம்.

மந்திரி ஆசிர்வாதம் அமருவாய் உரைக்கின்றேன்.

அம்பரீஷராஜன் தரு. (தேசவிசாரணை)

அயோத்தியாபுரியில் அரியின்திருநாமம்
அனுதினம்துதிக்கின்றுரா மந்திரி

மந்திரி தரு.

அய்யனேஉந்தன் ஆக்கினைபடியே
அனுதினம்துதிக்கின்றுரே அரசே

அம்பரீஷராஜன் தரு.

வேதப்பிரா்மணர் வேதங்களோதி
மூவேள்வியும்செய்கின்றுரா மந்திரி

மந்திரி தரு.

நசதனேவேதியர் நன்மையுடன்பாகதி
நடந்தேரிவருகின்றதே அரசே

அம்பரீஷராஜன் தரு.

தானதருமம்முப் பத்திரெண்டும்
தவராமல்நடக்கின்றதா மந்திரி

மந்திரி தரு.

சந்ததம்தான தருமங்களெல்லாம்
தவராமல்நடக்கின்றதே அரசே

அம்பரீஷராஜன் தரு.

கன்னியர்கர்ப்பு கணவனைதெய்வமாய்
கருதிநடக்கின்ருரா மந்திரி

மந்திரி தரு.

மன்னனேமாதர்கள் கர்ப்புநிலைதனை
மாருமல்நடக்கின்ருரே அரசே

அம்பரீஷராஜன் தரு.

உலகம்தழைக்கமாத மும்மாரிஉண்மையாய்
பெய்கின்றதா மந்திரி

மந்திரி தரு.

உத்தமாஉங்கள்உண்மை சொல்படியேஒன்றும்
குறைநிலில்லையே அரசே

அம்பரீஷராஜன் கவி.

நன்னயஅயோத்திதன்னில் நலமுடன்குறைகளின்றி
தன்மையாயிருக்கக்கண்டு சந்தோஷம்கொண்டேன்யானும்
இன்னிலமதிக்கும்மந்திரி என்னிடபட்டந்தன்னை
அன்பாகசிரிதுகாலம் ஆண்டுநீவருகுவாயே.

ஷை வசனம்.

கேளும் மந்திரி என்னுடைய பட்டத்தை சிரிதுகாலம் ஆள
வேண்டும் மந்திரி.

மந்திரி தரு.

என்னமொழிசொல்லவந்தாய் மன்னா இது
ஏற்குமோஎன்னிடம் நீசொன்ன
இன்னிலம்தன்னைநான் இன்பமரசாண்டாலே
அன்னவர்எங்கேபோரீர் அதைஎனக்குரைப்பீர்

அம்பரீஷன் தரு.

சொல்லுவேன்சிரிதுகாலம் மந்திரி
நீ சுகமாக அரசாண்டால் தந்திரி
அல்லலில்லாமலே அடவியில் சென்றுயானும்
நல்லாகதுதிசெய்து நாரணன்பதத்தைகாண்பேன்

மந்திரி தரு.

அய்யோஉன்னைவிட்டு நான்பிரிந்து
இந்த அவனியைஆள்வதோ திரிந்து
மெய்யாசஎந்தனை மேதினிதன்னில்விட்டு
பைய்யவேசென்ருலே பார்ப்பதுஎக்காலம்

அம்பரீஷன் தரு.

அருமையுள்ளாளர் தன் மந்திரி கேளும்
அந்த அடவியில்சென்றுசில காளும்
பெருமைபெருக அந்த பெருமான் அருளைபெற்று
சிறுமைகளில்லாமல் திரும்பிவருவேனென்று

மந்திரி தரு.

ஆளோர்ணிந்தஉலகை அய்யா
அக்குயானும்வருகுவேனுன் மெய்யா
நாளும்ஒருயிராக நாமிருந்தோமேஇன்னுள்
மீளாதுன்பந்தனுக்கு மேதினியில்என்னசெய்வேன்

அம்பரீஷன் தரு.

எத்திசைபுகழும்சத்திய சிலா நீ
இந்தமொழியெங்கேகற்றாய் பேலா
குற்றமாகசொன்னாலும் குருக்கொண்டுசொல்லாயோ நீ
இத்தருணம்நான்சொல்ல எதிர்த்துப்பேசலாகுமா

மந்திரி தரு.

எந்தன்மீதுகோபம் வேண்டாம் அரசே
நான் இந்தகொடுமைக் கென்செய்வேன் வரிசா
அந்தகானம்நீசென்றாலும் அன்னையும்ஸ்ரீமதியும்
சொந்தமாகஇங்கிருக்க சொல்லுவேன்இம்சென்னேனே

அம்பரீஷன் தரு.

அட்டமேலையெந்தனின்தன் மந்திரி
இனி அழுதுதவிக்கவேண்டாம் தந்திரி
இப்பவேயம்பிகையோடு ஸ்ரீமதிதன்னையுந்தான்
தப்பிதமில்லாமல்காத்து தரணியிலிருப்பாயே

அம்பரீஷன் சொல் கவி.

காலத்தையுரை[illegible]ம்மந்திரி கண்ணனைகண்ணால்கண்டு
சீலமாய்வரு[illegible]ானும் சித்தமாய்யிங்கிருப்பாய்
தாலத்திங்மே[illegible]ய்யும் தாதியேஒடிநீங்கள்
வேலொத்த[illegible]யம்பிகையை விரைதனினில்வைத்துவாரீர்.

அம்பரீஷன் வசனம்.

கேளும் மந்திரியே நான்போய் வருகிறவரை அரசை பாரு காத்திருந்தான் வருகவேண்டும். அடி தாதிமாரே நீங்கள் ஓடி அம்பிகையை அழைத்து வாரீர்.

மந்திரி வசனம்.

தாங்கள் உத்திரவின்படி செய்கிறேன் அரசே.

அம்பிகை வருகிற கவி.

எம்பிரான்பதத்தையென்றும் இடைவிடாதுதிகள்செய்து
நம்பியேஇருக்குமெந்தன் நாதனுரைழைத்தசேதி
சம்பிரமாய்யரியவேண்டி தையலும்பணிகள்பூண்டு
அம்பிகையம்மன்தானு ஆவலாய்வருகின்றேனே.

அம்பிகை வருகிற தரு.

உம்பர்உலகுக்கையன் பெம்பிரான்தனக்குமெய்யன்
அம்பிகையானபிந்த அம்மனும்வாரேன் உம்
காதிலணிந்தகம்மல் சோதியதுவும்மின்ன
நாதன்சேதியரிய நங்கையும்வாரேன்
கொடிபோல்உடையயெந்தன் இடையில்சேலையுந்துன்ன
படியில்லாதனெகாண பாவையும்வாரேன்

கும்பஸ்தனங்கள்மீது கொடியும்கச்சையும்துன்ன
செம்மையுடையமாது சேயிழைவாரேன் உம்
காலில் அணிந்ததண்டை கலகலகலெவென்ன
மாலின்பதத்தைகேர்ரி மங்கையும்வாரேன் உம்
வட்டவிழிகள்ரெண்டும் வடிவேலன்வேலோவென்ன
திட்டமாய்நடைநடந்து சேயிழைவரரேன் உம்

அம்பிகை தரு வேறு.

சருணம்நாதா உமதுபாதம் சருணேநாதா
சருணமேசெய்திட்டேன் தையல்உமதுதேவி
தருணம் தருணம்இது தற்காத்தருள்எந்தனே ச
வேதநாதன் ஆனைக்காத்த ஆதிமூலன்
சோதிபதம்துதிக்கும் சுந்தராஉந்தனின்
பாதம்தனில்துதித்தேன் பாவையைக்காத்தருள் ச
மல்லிகைமுல்லை மருவுடன் நல்லசாமந்தி
எல்லைமருக்கொழுந்து எதிரில்லாவெட்டிவேர்
துல்லிதரோஜாவும் துலங்கும்பாதத்திலிட்டு ச
சுந்திரமாகஇருந்த என்னை விந்தையாய்அழைத்த
அந்தசேதிஎனக்கு அரியவுரைத்தருள்
கந்தம்கதம்பபசூடும் கன்னிபணிந்திட்டேன் சரு

அம்பிகை கொச்சகம்.

மனுமுறையைவழுவாத மகிழ்ச்சியுள்ளநாதாநீ
அனுதினமும்அரிபாதம் அன்பாகதுதித்துமேதான்
மனமகிழ்ச்சியாஇருந்த மங்கைதனையிப்பொழுது
சனசபைக்கிநீழைத்த காரணத்தையுரைப்பீரே.

அம்பிகை வசனம்.

நாதா! நமஸ்காரம். ஸ்ரீ வைகுந்தநாதனின் பாதத்தை தொ
ழுதுத் தியானித்து இருந்த என்னை இந்த சபைக்கு அழைத்தவித
தை தெரிவிப்பீர் நாதா.

அம்பரீஷன் கவி.

பாதத்தில்பணிந்தஎந்தன் பாவையேவாழிவாழி
காதலர்பழைத்தசேதி கன்னியேஉரைப்பேன்கேளும்
மாதவன்தன்னைப்போற்ற மங்கையேவனத்திற்சென்று
போதவேவருவேன்யானும் பொருந்தியேஇருப்பாய்தானே.

அம்பரீஷன் வசனம்.

கேளும்பெண்ணே அம்பிகையே நான் வனத்திற்சென்று கண்ணனை கண்டு வருகிறேன் விடைகொடுப்பாயாக.

அம்பிகை தரு.

மன்னமன்னர்கள் இராசனே இந்த
மங்கைதனக்கு நேசனே
என்னமொழிநாதா இப்போசொல்லவந்தது
அன்னவரேகானகம் ஆகாதுநீபோக

அம்பரீஷன் தரு.

தவத்தோர்மகிழும் மங்கையே எந்தன்
தவத்துக்குரிய நங்கையே
பவத்தையொழிக்கயானும் பகவான் தன்னை துதிக்க
அவத்தமாகநீயும் ஆகாதுஎன்னபோமோ

அம்பிகை தரு:

வனத்துக்கேகவும் போகாது உனக்குஅந்த
வண்மைதவமும் ஆகாது
மனதுக்குறியபடி மகிழ்ச்சியாயிருவரும்
கனத்தசல்லாபமாக காதலாயிருக்கலாம்

அம்பரீஷன் தரு.

பேலதமங்கையே நீபோடி அந்த
பெருமான் தன்னையும்நான் நாடி
வாதைபடும்சென்மத்தை வருகாமல்நான்செய்ய
ஏதுகாரியம்சொன்னாய் எட்டவில்லடிநீயே

அம்பிகை கந்தார்த்தம்.

நாதாநான்சொல்வேன்கேளும்நங்கைமேல்கோபம்வேண்டாம்
ஆதாரமில்லாகானம் அடுக்குமோஇப்போசெல்ல
வாதாகேள்வாலீபகாலம் வண்மையாய்இருவர்கூடி
சாதாவாய்சரசஞ்செய்து

தரு.

சல்லாபமாஇருக்கலாம் இருவர்கூடி
எல்லாலீலைகள்செய்யலாம்
நல்லாகசொல்லுவேன்கேள் நாதாமுதுமைகாலம்
அல்லலில்லாததபம் அப்போசெய்வீரேநாதா

அம்பரீஷன் கந்தார்த்தம்.

எண்ணரகற்றநன்ருய் எழுத்தரவாசித்தாலும்
பெண்புத்திபேதம்என்று பேசுவார்உலக்மாந்தர்
கண்முன்னேஉந்தன்சொல்லும் கண்டிடலாச்சுதிப்போ
மண்மேலேஇந்தசென்மம்

தரு.

மாயம்இதுநிலையில்லை அடிமானே
மாயம்இதுநிலையில்லை
மாயன்இந்தசென்மந்தான் மாள்வதுஇன்றேநாளோ
காயம்இருக்கும்போதே கண்ணனைக்கண்டுவாரேன் மாய

அம்பரீஷன் வசனம்.

அடிபெண்ணே இந்த ஜென்மம் மாயம் இனி நிற்கமாட்டேன் செல்லத்தான்போரேன்.

அம்பிகை தரு.

இன்னும்சிரிதுகாலம் இருந்துகானகம்போக
ஆகாதோ அது போகாதோ

அம்பரீஷன் தரு.

இன்றைக்குநாளைக்கும் இருப்பதுஎன்னநிலை
சொல்லடி நீயும் நில்லடி

அம்பிகை தரு.

வனந்தன்னில்சென்ருலே வயற்றுப்பசிக்கென்செய்வீர்
நாதனே எந்தன் நீதனே

அம்பரீஷன் தரு.

அரும்பசிவந்தாலும் அரிநாமம்புசிப்பேனுன்
அரிவையே இன்னும் தெரிவையே

அம்பிகை தரு.

கதிரவன்உஷ்ணத்திற்கும் கனமழைக்கென்செய்வீர்
வேந்தனே எந்தன் சாந்தனே

அம்பரீஷன் தரு.

காரிருள்சனமழை கதிரவன்உஷ்ணத்தையும்
கார்ப்பாரோ கண்ணன் ஏர்ப்பாரே

அம்பிகை தரு

அடர்ந்தவனந்தன்னிலே ஆளிபுலிக்கென்செய்வீர்
அரியவே எனக்கு உரையுமே

அம்பரீஷன் தரு.

கட்டுபடாமிருகத்திற்கு எட்டெழுத்தம்புஉண்டு
பாரடி நீயும் தோடி

அம்பிகை கவி.

சொல்லிடும்சொல்லைதட்டி சொருசாகசெல்லுகின்ற
நல்லஎன்நாதாஎன்னை நானிலமீதுஎன்றும்
எல்லையில்குறைகளின்றி எங்களைக்கார்ப்போர்யாரோ
அல்லல்களில்லாநாதா அறிந்துரைசெய்குவீரே.

அம்பிகை வசனம்.

கேளும் பிராணேசா தாங்கள் போனால் எங்களைக் கார்ப்பது யார் சொல்லும்நாதா.

அம்பரீஷன் கவி.

நன்னயமாகஎந்தன் நங்கையேசொல்லக்கேளாய்
என்னிடசெல்வியான ஸ்திரீமதியுன்னையுந்தான்
அன்னவன்மந்திரிகார்ப்பான் அன்பாகஇருந்தீருனால்
கன்னியேகானம்சென்று கண்ணனைக்கண்டுவாரேன்.

அம்பரீஷன் வசனம்.

கேளும் பெண்ணே அம்பிகையேஉன்னையும் ஸ்திரீமதியையும் மந்திரிகார்ப்பான் போய்வாரேன் இருப்பாய்பெண்ணே.

அம்பரீஷராஜா கானகம் நோக்கி வருகிற தரு.

சித்தமாய் அயோத்திவிட்டு மெத்தவேகானகங்கிட்டி
சீராய்நடந்துவாருரே அம்பரீஷராஜன்
சீராய்நடந்துவாருரே

பத்தியாய்பரிசனங்கள் சுத்தியமந்திரிவிட்டு
பண்பாய்நடந்துவாருரே அம்பரீஷராஜன்
பண்பாய்நடந்துவாருரே

கண்ணனின் அருளைக்காண எண்ணிலாமிருகம்வாழும்
கானகத்தைநாடிவாருரே அம்பரீஷராஜன்
கானகத்தைநாடிவாருரே

மண்ணினில் துன்பந்தருகும் எண்ணிலாபிறவிநீக்க
மாலவரைத்தேடிவாருனே அம்பரீஷராஜன்
மாலவரைத்தேடிவாருனே

அல்லல்களெல்லாம்வெறுத்து நல்லகுகைதன்னைகண்டேன்
அன்பாய்இங்குதங்குவேனுனே அம்பரீஷராஜன்
அன்பாய்இங்குதங்குவேனுனே

அம்பரீஷராஜன் கவி.

பொன்பொருளதைவெருத்து பூவையராசைவிட்டு
என்னிடதிரேகத்தாசை எல்லாமும்மறந்துஇப்போ
நன்னையமாகநானும் நாருயணுவென்றுசொல்லி
பின்னமில்லாமலிப்போ பெருமானை துதிசெய்வேனே.

அம்பரீஷன் விஷ்ணுவைநோக்கி தபம்புரிவது தரு.

அச்சுதா மச்ச கூர்மவதாரா ஓ அரியோ கரியே
அடியேனைவந்து காத்துரக்ஷிப்பாய்

பச்சைமேனியா பத்தவதாரு ஓ அரியோ கரியே
பாரில்பிரக்துமே பரதவிக்கின்றேன்

மண்ணுபெண்ணுபொன்பொருளைவெருத்தேனே ஓ அரியோகரியே
உன்மைந்தனுன்எனைவந்துகாத்தருள்வாய்

அண்டரெண்டத்தை அளந்தமாதவனே ஓ அரியோ கரியே
ஆனைக்கருள்தந்துகாத்தவா

தூணினில் நரசிங்கமானவா ஓ அரியோ கரியே
தோன்றிஎந்தனைவந்துகாத்தருள்வாய்

அவனியில்சிறு அன்பன்கோவிந்தன் ஒ அரியோ கரியே
அன்பாய்பாடிடும்பாட்டுக்குகந்தவனே

சத்தியலோக பிர்மன்தந்தையே ஒ அரியோ கரியே
சருணம்தருணம் வந்துகாத்தருள்வாய்

மகாவிஷ்ணு வருகிற கவி.

அகிலத்தில்புகழ்ப்பெற்ற அயோத்தியாநகரையாளும்
பகலொத்தமனத்தோனன பக்தனும்அம்புரீஷன்
சகலத்தைவெறுத்துத்தானே தவமதுசெய்யகண்டு
நிகரற்றஆதிமூலன் நேர்மையாய்வருகின்றேனே.

தரு.

மண்ணுவிண்ணளந்தபாதர்வந்தார் கண்ணனுகினேர்
எண்ணும்வரங்கள் இவர்தந்தார்
நண்ணும்உலகந்தன்னில் எண்ணிப்பத்தவதாரம்
திண்ணமுடன்எடுத்த திருமால்இவரேநீதன்

(சுருள்) சித்தமாய் நித்தமும் பத்தரை காக்கும்
உத்தமனுகிய பத்தவதாரன் மண்ணு

தூணில்நரசிங்கமாய்வந்தேன் இரணியன்முன்
தோணியவனுடல்பிளந்தேன்
பாணிகோதண்டபாணி பாவைலக்ஷ்மிநேமி
வாணிநாதனையீன்ற வள்ளல் இவரேசாமி

(சுருள்) வனுவினில் சோமுகன் அலைகடல்போக
பலமுள்ளமச்சமாய் நிலையதாய்கொன்றேன் மண்ணு

அத்தன்கெங்கையைத்தரித்தசீலன் அவர்தமக்கு
மைத்துனனுகவந்தலோலன்
சித்துவித்தையறிந்த தீரர்பலரைக்கொன்றேன்
பத்தர்தங்களுக்கெல்லாம் முத்தனுகவேநின்றேன்

(சுருள்) பாரினில காரண மாரனை படைத்தேன்
சீருள்ள பிர்மனை உந்தியி லளித்தேன் மண்ணு

அண்டர்பலரும்கூடிவாழ்த்த கெருடன்தானும்
கண்டுமுதுகிலெனை ஏத்த
தொண்டநகர்தன்னிலே துலங்கும்ஜம்புலிங்கன்தன
பண்டுவினையைத்தீர்த்து பதத்தில்சேர்த்தருள்வாசன்

(சுருள்) பாவலர் காவலர் நாவல ரோடு
ஆவலாய் தேவர்கள் மேவியே வாழ்த மண்ணு

விஷ்ணு வசனம்.

சேஷும் தேவமுனிவரே இப்போது கானகம்சென்று அம்ப ரீஷனுக்கு தெரிசனம் தரவேண்டும் வாருங்கள் செல்லுவோம்.

வைகுந்தத்தைவிட்டு விஷ்ணு அம்பரீஷனை நோக்கி வருகிற தரு.

நடந்தார்பாரீர்கானகம் நோக்கி
திடர்ந்தார் கோரி

நடந்தார்அம்பரீஷனின்தன் நல்தபம்தனைகாண
அடர்ந்தவனந்தனிலே அநேகந்தேவர்கூட நடந்

கூட்டங்கள்நாட தாசரெல்லாம்
கோஷ்டங்கள் பாட

வாட்டமில்லாமாது வனிதைலக்ஷ்மியோடு
நாட்டமாய்மார்பினில் நல்துளசியுமாட நடந்

திக்கெல்லாம்ஓங்க கெருடனவன்
மிக்கவேதாங்க

அக்கரையாகவே அம்பரீஷன்தபம்காண
பக்குவமாகவே பரந்தாமன்வெகுவாக நடந்

வேகமாய்வந்தார் அம்பரீஷனின்
அகோரத்தை கண்டார்

அகோரதபங்கண்டார் அரிவேரெண்ணம்கொண்டார்
மகாதேவரவருமே மனதைசோதிக்கவே நடந்

பொது வசனம்.

அம்பரீஷன் பிஷ்ணுவருவதை அரியாமல் தபம்செய்வது.

கவி.

அரிகரிகரியமாலே அகோரமாய்தபங்கள்செய்து
சரியென்றுஎன்னைக்காக்க சாரங்காவருகாதேனே
கரிதுயர்தீர்த்தய்யென்றும் கஞ்சனைக்கொன்றுய்என்ற
உரியதோர்கதையுப்பொய்யோ உத்தமாவருகுவீரே.

அம்பரீஷன் தரு பத்தர்கொண்டாடும்சிங்கம் என்றமெட்டு.

பத்தவதாரசிங்கம் பரமேகாத்திடதங்கம்
சித்தமிரங்கிஇங்கம் சிருவணைவந்து அரியேயாளுவா பத்தவ

மச்சகூர்மகரசிங்கம் மர்மமேனே அரோங்கம்
நச்சரவமீதிரங்கம் நாரணபரிபூரணயாளுவா பத்தவ

வாரகபரசுராமசிங்கம் வாமனஸ்ரீராமசங்கம்
சீதராபலராமதங்கம் தேடியோடியேநாடியாளுவா பத்தவ

புண்ணியபவுத்தசஙகன் புகழும்கலிங்கசிங்கன்
எண்ணிசாரஙகமோடு ஏனோனானே தானேயாளுவா பத்தவ

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக அம்பரீஷராஜன் தபம் செய்வதை கண்டு விஷ்ணுசோதிக்கஎண்ணி இந்திரனுகவருவது.



மாயாஇந்திரன் கவி.

உச்சிதகருடனின்தன் உருவதையகற்றசொல்லி
அச்சுதன் தானுமப்போ ஆனைதன்உருவாய்செய்து
வச்சிராயுதமதாக வளர்சங்குசக்கரம்மன்றத்து
மச்சனும்இந்திரன்போல் மால்அவர்வருகின்றனே.

மாயாஇந்திரன் தரு.

ஆதிமகாவிஷ்ணுவும்நல்ல அடுக்காரூபமாரிநடக்கலுற்றார்
ஜோதான்ரூபமாரிஅங்கு தேவதேவேந்திரன்போலவாரூர்

அம்பரீஷன் இந்திரனைபார்க்காமல் தபம்செய்வது தரு.

அரிகரிமாதவனேஎன்னை ஆளமனம்இன்னுந்தானில்லையோ
கரிதுயர்தீர்த்தவனேஎன்னை காரும்காரும்வந்துகார்வண்ணனே

மாயாஇந்திரன் தரு.

வெள்ளையானையின்மீதுஏறி வேணதேவர்வெகுபேரும்கூட
கள்ளமிலாதவர்போல்கண்ணன் கையில் வச்சிராயுதம்கொண்டுவாரூர்

அம்பரீஷன் தரு.

தாயென்றும்பாராமல் ரேணுகைதாயைக்கொலைசெய்தமாயவனே
நீயெனைகார்க்காவிட்டால் இதுநிந்தைநிந்தைவெகுநிந்தையாமே

மாயாஇந்திரன் தரு.

நாட்டமுடன்தேவர்கள்வெகு கூட்டங்கூடஅம்புரீஷனிடம்
வாட்டமில்லா கோவிந்தன்சொன்ன
பாட்டைபாடிகண்டார் காட்டதனில்

அம்பரீஷன் தரு.

அன்றுபிரகலாதன்துதிக்க அவர்துயர்தீர்த்திடஇரணியன்முன்
நன்றாகதூண்பிளந்துநரசிங்கமாய் வந்தவாகொந்தேனேநான்

மாயா இந்திரன் அம்பரீஷனைப்பார்த்து சொல்வது கவி.

அதிவிதஅயோத்திநாளும் அம்பரீஷாவந்தேன்வந்தேன்
சதிருள்ளவரங்களெல்லாம் சடுதியில்கேழ்ப்பாய்தானே,

அம்பரீஷன் இந்திரன்சொன்னதை கேளாமல்சொல்வது கவி.

நதிகடல்கடையும்போது நல்லாமையாய்காத்ததேவா
ததியதுகார்க்கஎன்னை தயாபரா வருகுவாயே.

இந்திரன் வசனம்.

ஏ அம்பரீஷா மெச்சினேன் வேண்டிய வரத்தைகேள் சீக்கி
ரம்தருகிறேன்.

அம்பரீஷன் வசனம்.

ஏ கருணாநிதியாகிய கடவுளே இன்னும் உன்மனமிரங்கவில்லையா சீக்கிரம்வந்து கார்ப்பாயாக.

மாயஇந்திரன் அம்பரீஷன் தபத்தைக்கலைத்துசொல்வது தரு.

உன்னிதகக ராஜும்மன்னா
உனக்குவேண்டிய வரம்என்னா
சொன்னால்வரமளிக்க சுந்திராவந்தேனே
நன்றாககேட்டவரம் நானேஅளிக்கிறேன்பார்

அம்பரீஷன் தரு.

ஆரையாநீருமே சொல்லு
அன்பாகஏவந்தாய் நில்லு
ஊரும்பேர்தான்என்னா உரைப்பாய்எந்தனுக்கிப்போ
கூரும்கூரும்நீதான் குற்றங்கள்சொல்லாமல்

மாயாஇந்திரன் தரு.

ஆசிர்வாதம்பாலித்தேன் இராசனே
அரியசுவர்க்கலோகம் நேசனே
வாசமாய்தேவர்கோமான் வந்தேன்வரம்பாலிக்க
இராசனேகேட்டாலே நானேதருகிறேன்பார்

அம்பரீஷன் தரு.

தேவர்க்கதிபனெனும் தேவனேஉன்னை
தேடிதபம்புரிந்து கூவனே.
ஆவலாய்நீவந்த அரும்வழிதனைப்பார்த்து.
மேவியேசொல்லுவாய் மேன்மைமேன்மைசொன்னேன்

மாயாஇந்திரன் தரு.

துஷ்டனைபோல் பேசும்வீரனே
செய்குவேனிப்போ பாருனை
மட்டியேஉந்தனை மதித்துஇவ்விடம்வந்தால்
பட்டியேவந்தவழிபார்த்து செல்என்னலாமோ

அம்பரீஷன் தரு.

காலனைபோல் பேசுப்இந்திரா
உனைகருதிதபம் புரிந்தார்சுந்திரா

மாலேஎனக்குதுணை மாயனவனேகார்ப்பாய்
சிலாசீக்கிரமாகசச்சி அப்புரம்செல்வாய்

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக விஷ்ணு இந்திரனுகவந்து வேண்டிய வரம் என்னவென்று கேழ்க்க அம்பரீஷன் எனேநாடி தபம்செய்யவில்லே நான்உலகரட்சகனுகிய விஷ்ணுவைநோக்கிதபம்செய்கிறேன் அவர் வந்து கார்ப்பார் என்று சொல்ல இந்திரன் கோபித்தவர்போல மரைந்துவிட அப்போது விஷ்ணுசுபரூபமாகவருவது.

விஷ்ணு கந்தார்த்தம்.

அம்பரீஷன்தபத்தைக்கண்டு அச்சுதன்மனமகிழ்ந்து
கெம்பீரபர்வதம்போல் கெருடன்மேல்ஏறிக்கொண்டு
உம்பர்கள்அநேகம்பேர்தான் உத்தமர்அருகில்சூழ
சப்பிரமாய்விஷ்ணுமூர்த்தி.

தரு.

சாரங்கன்வந்துமேநின்ருர் அம்பரீஷன்முன்பு
சாரங்கன்வந்துமேநின்ருர்

சாரங்கன்வந்துநின்ருர் சகலதேவர்கள்சூழ
பாரெங்கும்மெச்சிட பரமபக்தனின்முன்பு (சாரங்)

அம்பரீஷன்கண்டு துதிப்பது தேவாரம்.

அண்டரெண்டபுவனுதி அளந்தமாலே
அச்சுதனேமச்ச கூர்மவராகரூபா
எண்டிசையிலுன்னருளே என்னசொல்வேன்
எளியேன்முன்வந்திடுக கண்ணுல்கண்டேன்
பண்டவினைதீர்த்துவுன் பாதத்தில்சேர்ப்பாய்
பரந்தாமாஅரிமுகுந்தா கரியமாலே
துண்டனும்எந்தனிட குற்றமோடு
துயர்தீர்த்துஎந்தனேயும் கார்த்திருப்பீரே.

விஷ்ணுசொல் தரு.

பாரில்பரமபக்தநீயே தேருவாய்தானே
கோரிவேண்டும்வரமதனே குரித்தால்தருவேனே

அம்பரீஷன் தரு.

கோவிந்தா அரிமுகுந்தா கோபாலகிருஷ்ண
பாவியேன்முன் தான்வருக பார்த்துகளித்தேனே

விஷ்ணு தரு.

பத்தருக்குபக்தனாக ஒத்துஇருப்பேனுன்
உத்தமர்க்குவரமகொடுத்து சித்தம்களிப்பேனுன்

அம்பரீஷன் தரு.

ஒருபத்தவதாரங்கொண்ட திருமூர்த்தியோனே
உனபெருமைபாதம்மரவா வரம்தருவாயேதானே

விஷ்ணு தரு.

உந்தன்மனதிடத்தைகண்டு சந்தோஷம்கொண்டேன்
இந்தவரந்தந்தேனவேறு சந்திராகேழ்ப்பாய்

அம்பரீஷன் தரு.

இந்தமண்டலத்தோர் உந்தனையேகண்டுதுதிக்கவும்
எண்டிசையாள்யாள்வதற்கு நன்றுதருவாயே

அம்பரீஷன் வசனம்.

என் அயோத்தியில் இருக்கப்பட்ட பரிஜனங்கள் உன்னை துதிக்கவேண்டும் நான் அந்த அயோத்தியைபாளும்படி கிருபைசெய்ய வேண்டும் கருணாநிதியே.

விஷ்ணுசொல் கவி.

இந்தவோர் அவனிபோற்றும் இயல்புள்ள அம்புரீஷா
உந்தனின்மனத்தைக்கண்டே உளமதுமகிழ்ந்தோம்வேறு
எந்தநோய்பிணிகள்கஷ்டம எதுவந்தபோதும்தீர்க்க
சந்திரசக்கரமுந்தந்தேன் சுகமுடன்வகலாமே

அம்பரீஷன் சொல் கவி.

உலகதின்மானிடனாய் சென்மந்தந்தாய்
உனைமறவாவரமதுவும் உகந்துதந்தாய்
இலகியேநான்இவ்விடம் வரவுமதியுந்தந்தாய்
என்முன்னேஉன்தெரிசனமும் உகந்துதந்தாய்

நலமுடனேவரங்கள்வெகு கோடிதந்தாய்
நான்பெறவும்சக்கரத்தை நன்மைதந்தாய்
அலைகழுமலைபாலுண்ட அனுதினாதர
அன்பாகபோகவிடை தருகுவாயே

அம்பரீஷன் வசனம்.

நான் இனி அயோத்திசெல்ல கருணைபுரியவேண்டும், கார்த்திபனே.

விஷ்ணு வசனம்.

அப்படியே உன்இஷ்டப்படிசென்று அரசாண்டு கடைசிகாலத்தில் நமது பாதாரவிந்தத்தை அடைவாயாக.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக அம்பரீஷராஜன் விஷ்ணுவைக்கண்டு சகல வரமும் பெற்றுக்கொண்டு வீட்டைநோக்கி வருகிறபோது அயோத்தியில் அமபரீஷன்பெண்சாதி அம்பிகை மந்திரி இடம் அரசனைக் காணோம் என்று துக்கிப்பது.

அம்பிகை மந்திரியிடம் சொல்வது தரு

அரசனும்கானகம்போனார் அரிவைமுன்வரவுங்காணேன்
மந்திரி எந்தன தந்திரி

மந்திரி சொல் தரு.

அம்மணிவிசனம்வேண்டாம் அரசனும்அரியைக்கண்டு
வருகுவார் இன்பம் தருகுவார்

அம்பிகை தரு.

கானகம்வாழ்மிருகங்கள் கண்டு அடித்துண்பதுவோ
என்செய்வேன் மந்திரி என்செய்வேன்

மந்திரி தரு.

அரிநாமம்துதிப்பவர்க்கு ஆபத்துவருகாதம்மா
அழுகாதே சும்மா விழுகாதே

அம்பிகை தரு.

மன்னனைப்பிரிந்தகாளாய் மாதுமேகஷ்டங்கள்தானே
பாலனே சத்திய சீலனே

மந்திரி தரு.

என்னகஷ்டம்உந்தனுக்கு உன்னிதமாய்தீர்த்திடுவேன்
அன்னையே உந்தன் முன்னையே

அம்பிகை தரு.

காட்டுக்கேகிமன்னர்தமை நாட்டமாகஇட்டுவற
வாருமே கொஞ்சம் பாருமே

மந்திரி தரு.

அன்னையேஉன்சொற்படிக்கி உன்னிதமாகவேநாடும்
தேடுவோம் கானகம் நாடுவோம்

பொது வசனம்.

இந்தப் பிரகாரமாக அம்பிகையும் மந்திரியும் அரசனைதேடி போக அப்போது காட்டிலிருந்து அம்பரீஷன் வருவது.

அம்பரீஷன் வேறு தரு.

அரியின்திருப்பாதங்கண்டுமே அம்பரீஷராஜன்
ஆவலாகநடந்துவாரானே மனையைநோக்கி
தெரிவைதேவிசெல்வி மந்திரிசேதிபரிய
சிக்கிரம் நடந்துவாராறே

அம்பிகை தரு (வேறு முன்சீர்.)

வீட்டைவிட்டுக்காட்டுக்கேக வீதியினில்வந்தோமிப்போ
செல்லுவோம் விசனம் வெல்லுவோம்

மந்திரி தரு.

அருகில்வாரும்அம்மணியே வருபவர்அரசன்தானு
பாருமே என்றாய் கூருமே

அம்பரீஷன் வேறு முன் அரியின் திருப்பாதங்கண்டுமே என்றமெட்டு.

அடவிதாண்டிஅயோத்திவந்துமே அம்பரீஷராஜன்
ஆனந்தமாய்நடந்துவாருரே
மடமடவென்றுநடந்துவாருரே வெகுவீதிதாண்டி
மன்னன்இருக்கும்வீதிவந்தாரே.

அம்பிகை தரு. (வேறு முன்சீர்)

அரசன்போலஇருந்தபோதும் அருமுனிபோல்சடைமுடியும்
தெரியுதே அதோ மறையுதே

மந்திரி தரு.

அப்படிசொல்லாதேதாயே சொர்ப்படிஅரசனுச்சே
அன்னையே அதோ முன்னையே

அம்பரீஷன் தரு. முன் அரியான்திருப்பா என்றமெட்டு.

கண்ணனவரைகண்ணால்கண்டுமே அம்ப ஷராஜன்
கடுகிநடந்து மனையைவந்தாரே
திண்ணமாய்மனைவிமந்திரி எதிரிருக்க
சேதிஎன்னவென்று கேட்டாரே.

அரசனைகண்டு அம்பிகை பணிவது கவி.

ஆயர்தன்குலத்துதித்த அரியின்தன்பாதங்கண்ட
நாயகாஉந்தன்பாதம் நங்கையும்பணிந்தேன்காரும்.

அரசனை மந்திரி பணிவது கவி.

நேயனுமாகிஎந்தன் நின்னையஉயிருமாகி
தாயாகிதந்தையான தற்பறஅரசேபோற்றி.

அம்பரீஷராஜன் கவி.

வஞ்சியேமாதேஎந்தன் வனிதையேவாழிவாழி
தஞ்சமென்றடைந்தமந்திரி தலமீதுவெகுநாள்வாழி
சஞ்சலமில்லாஎந்தன் தலநகர்அயோத்திதன்னில்
மிஞ்சியகுறைகளின்றி மேன்மையாய்நடக்குதாசொல்.

அம்பரீஷன் வசனம்.

கேளும் எனது தேவி அம்பிகையே மந்திரி சத்தியசீலா நீங்கள் நீடூழியாக வாழக்கடவது எழுந்திருப்பீராக இந்த அயோத்தியில் ஒருவின்றி சுபேக்ஷசம்பொருந்தி நடக்குதா சொல் மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே ஒரு குறைவின்றி நடக்கிறதென் னரசே.

போது வசனம்.

இந்தப் பிரகாரமாக அரசன் அயோத்தியையாண்டு சிலது காலம்இருக்க ஒருநாள் அம்பரீஷன் கொலுவாகஇருக்கிறசபையத்தில் திரிலோகசஞ்சாரியாகிய நாரதர் உலகமெல்லாம சுற்றி கைலிலிங்கிரிக்கு வந்து அங்கும் ஒன்றும் கலமமில்லாததால் பூலோகம் நாடி.வருவது.



நாரதன் வருகிற கவி.

தக்கனின்சாபந்தன்னால் தலமெலாம்சுற்றிசுற்றி
மிக்கவேகலகஞ்செய்யும் மேதினிவல்லோன்தானும்
அக்கரையாகவேதான் ஆழினைகையில்கொண்டு
நக்கனை துதித்துபோற்றி நாரதர்வருகின்றாரே.

தரு.

நாரதபிர்மமிதோ வந்தார் ஞானனந்தர்
சீரதாபுகழ்மிகதந்தார்
நாரதபிர்மம்வந்தார் நானிலத்தோர்கொண்டாட
நீரதுவேயணிந்து நினைந்துசிவனைபேசி

(சுருள்) நித்திய உத்தம வஸ்துவைப் போற்றி
பத்தியாய் உலகத்தை மெத்தவே சுற்றி (நாரத)

காலில்பாதக்குறடும்மாட்டி புலித்தோல்தன்னை
மேலில்படியதன்றுப்பூட்டி

நாலாம்பதவிதரும் நாராயணபூராயணவென்று
சாலதுதித்துமெள்ள சாஸ்திரந்தன்னைபேசி

(சுருள்) தத்தன தானன தித்திமி யென்று
மெத்தவே ஆழினை சுத்தமாய் மீட்டி (நாரத)

கலகப்பிரியனென்பார்என்றும் அதுகளின்றி
கலக்கப்பிரியனும்நான் தானே

துலக்கமாகவேஇன்று சுற்றிபூலோகம்நாடி
சலிக்காமல்யீசன்வாழ் தன்கையிலையைவிட்டு

(சுருள்) தாவி பூலோகமதை மேவித்து டர்ந்துநாடி
கூவி அரனே வென்று ஆவலுடனே பாடி (நாரத)

மெய்யில்விபூதிதன்னைபூசி வெகுவிதமாய்
அய்யமில்லாசிவனைபேசி

அயோத்திநகர்ஏகி அம்பரீஷன்தன்னைக்கண்டு
அய்யன் அரியைக்கண்ட சுத்தசேதியரிய

(சுருள்) சுத்த மனமுடைய சித்தர்கள் பணிய
இத்தரையோ ரெல்லாம் கர்த்தனென் றேத்த (நாரத)

நாரதர் கவி. 14839.

திரிலோகம்சஞ்சரித்து சிவகையிலாசம்வந்தேன்
ஒருசேதியில்லாதாலே உயிர்பெறுபுவியின்மீது
அரிபாதங்கண்டுவந்த அம்பரீஷன்சேதிகாண
சரியென்றுசந்தோஷித்து சடுதியில்வருவேனே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக நாரதமுனியானவர் அயோத்திநாடி வருகிறபோது பர்வதவனத்தில் பர்வதமுனியானவர் தபம் செய்ய வருவது.

ஆவணக்காப்பக

பர்வதமுனி வருகிற கவி.

வேதங்களுணர்ந்தோர் விண்டுவைபோற்றி
  விதமுடன் கீதங்கள்பாடி
சோதியைநித்தம் துதித்துகண்கண்டோர்
  சுகமுடன்கமண் டலம்பிடித்து
காதினில்கவச குண்டலம்தன்ன
  கருதியபுலித்தோலு மணிந்து
பாதத்திலணிந்த குறடதுமசைய
  பர்வதமுனியும் வருகின்றாரே.

பர்வதமுனி வருகிறதரு பல்லவி.

பாரில்அரியைப்போற்றி கோரிதவம்புரியும்
பர்வதமுனிநானேநல்ல பத்தவதாரற்குமெத்தவும்சீலன் (பா)

அநுபல்லவி.

நாரியர்ஆசைவிட்டு நவத்துவாரம்அடைப்பேன்
வாரிஅட்சாட்சரத்தை வாசியோடுஜெபிப்பேன்
வல்லமைசீலன்தபத்தின் எல்லையின்மேலன்

(சருள்) வண்மைசேர் உலகதின் உண்மையைகண்டோர்
தண்மையாய் அரியிடம் நன்மையை உண்டோர் (பாரி)

சரணம்.

தெண்டுகமண்டலமும் கொண்டகரத்திலிங்க
அண்டர்முனிவர்களும் கண்டுஆசிர்வதிக்க
ஆனேயைக்கார்த்தோர்; அவர்போதத்தைவர்த்தோர்

(சருள்) அந்திர இந்திர சந்திர முனிவரின்
மந்திர தந்திர விந்தைளைகற்றோர் (பாரில்)

மூலாதாரந்தன்னில் சிலன்கணேசர்கிற்பர்
மேலாய்சுவாதிஷ்டானம் சாலபிர்மனும்கிற்பர்
மேந்திரமாகமணிபூரக ஏந்திரந்தன்னில்

(சருள்) மெல்லியாம் லக்ஷுமி வல்லிய ருடனே
சொல்லிடும் விஷ்ணுவும் சூழ்ந்துமே இருப்பார் (பாரில்)

அனுகதம்ருத்திரர் அமர்வார்விசுத்திமகேசன்
வினவிடும்ஆக்கினே விமலன்சதாசிவனும்
வீற்றிருப்பாரே அதில் ஏற்றிருப்பாரே

(சருள்) விண்ணவர் மண்ணவர் பண்ணவர் போற்ற
திண்ணமாய் உடலதின் உண்மையை கண்டோர் (பாரில்

பர்வதமுனி கவி.

ஜெபதபம்தன்னேநாளும் சிருடன்வெகுநாள்செய்து
அபஜெயமில்லாமல்தான் அரிசிவன் தன்னேக்கணடேன்
விபரீதஉலகிலுள்ள உண்மைபாசந்தொடாமல்
சபடில்லாசிஷமாரே கண்டுநான் துதிசெய்வேனே

பர்வதமுனி யோகத்தில் அமர்ந்த தரு.

யோகத்தில் அமர்ந்தாரே பர்வதமுனி
யோகத்தில் அமர்ந்தாரே

யோகத்தில்அமர்ந்தாரே ஏகஒருமனதாய்
ஆகமங்கள்துதிக்கும் அஷ்டாஷ்சரத்தைஎண்ணி யோ

பொது வசனம்.

இப்படிப்பிரகாரமாக பர்வதமுனி தவஞ்செய்திருக்க அந்தசமையத்தில் அந்தபர்வனவதத்தின்வழியாக வந்த நாரதமுனிகண்டு பர்வதமுனிவரின் தபத்தைகலைப்பது.

நாரதர்: பர்வதனை (தபத்தில் கண்டு) கூப்பிடுவது தரு.

தவஞ்செய்யும் முனிவோரேபாரும்
தவநாரதன்வந்தேன் பதில்கூறும்
கவனமாய்சரிகையொடு கண்டுகிரிமைதாண்டி
மவனமாய்யோகத்தில் மனதைசெலித்திடும் (தவஞ்)

மூடும்விழிதிறந்து பாருமே
நான்மொழியும் மொழியதனைகேளுமே
ஆடும்மனமதனை அடக்கிஒருவழியாய்
குடிபரம்பொருளை துதிக்கும்முனியேவந்தேன் (தவஞ்)

ரேசகபூரக மாகவேநல்ல
நினைந்துகும்பமதனை ஏகவே
ரேகசகல்மூச்சுவிடும் பூரகம்ஏற்றிடும்
வாசகரும்பமூச்சு வருநாதெனவரிந்து (தவஞ்)

அடைத்துவிட்டீரோ வழியெல்லாம்
நான் அழைக்கும் மொழிகளென்னுசொல்லும்
படைத்துஅனுப்பும்பிர்மன்பாலன் நாரதன்தானே
பர்வதமுனிவரேபாரும் பாரும்எந்தனை (தவஞ்)

பர்வமுனி நாரதனை கண்டு சொல்வது கவி.

உலகெலாம்கார்க்கும்கண்ணன் உத்தமபேருவாரும்
நிலைபெரும்உலகந்தன்னில் நீரறியாததுண்டோ
பலவிதமாகவந்து பரித்தாயேயோகந்தன்னை
சலியாமல்சேதியுண்டோ சடுதியில்உரைசெய்வீரே:

பர்வதமுனி வசனம்.

வாரும் நாரதமுனியே யோகத்தை கெடுத்தாயே என்னசேதி சொல்லும் நாரதமகாமுனியே.

நாரதன்சொல் கவி.

வளம்பெரும்அயோத்திநாட்டை வண்மையாய்அரசுசெய்யும்
இளமையோன்அம்புரீஷன் இங்குமேதவங்கள்தானே
நிலையுடன்செய்வதாக நின்னயகேள்வியுற்றேன்
தளமுடன்பார்க்கவந்தேன் தானெங்கேஉரைசெய்வீரே.

நாரதன் வசனம்.

கேளும் பர்வதமுனியே இங்கு அம்பரீஷன் தபஞ்செய்வதாக கேள்விபுற்று வந்தேன் அவன் எங்கு இருக்கிறுன் சொல்லும் முனியே.

பர்வதமுனி தரு.

அம்பரீஷராஜன்வந்தான் அரியதவங்கள்செய்தான்
அயோதிபாநாடவனும் சென்றுனே

நாரதன் தரு.

வந்தஅம்பரீஷனுக்காய் அந்தநாராயணரும்
எந்தவிதமாய் வரந்தந்தாரு

பர்வதமுனி தரு.

இந்தவிதமரியேன் வந்தஅரசனும்தான்
சொந்தமாய்வரம்பெற்று சென்றுனே

நாரதமுனி தரு.

வரம்பெற்றதரியேனன்று திரமாகசொன்னதாலே
சரியாய்அயோத்திசென்று அறிவேனே

பர்வதமுனி தரு.

அயோத்திசெல்வதானுல் அருமுனிநானும்வாரேன்
அன்பாய்இருவர்சென்று அரிவோமே

நாரதமுனி தரு.

வருகின்றனென்றதாலே சரியதுவும்நன்று
பருவதமுனிவோரே செல்வோமே

அம்பரீஷராஜன் முனிவரைக்கண்டு பணிவது கவி.

முப்பத்துமூன்றுகோடி முதல்வராம்தேவரோடு
நாற்பத்தெண்ணுயிரம்பேர் நல்ரிஷி அ தனில்மிக்க

ஒப்பற்றமுனியேஉங்கள் ஒளிர்பெரும்பாதந்தன்னில்
செப்பற்றமலரைக்கொண்டு சேவித்துவணங்கினேனே.

நாரதர்சொல் கவி.

எண்ணிலாசெல்வம்பெற்ற இந்திரன்குபேரன்போல
நண்ணுக அயோத்திநீயும் நலமுடன்வாழிஇன்னும்

பர்வதமுனி கவி.

மண்ணினில்பிரகளாதன் மார்க்கண்டன்ஆயுசுபெற்று
திண்ணமாய்களத்திரபுத்திர திரளொடுவாழிவாழி

பர்வதமுனி வசனம்.

மகாராஜனுக இருப்பாயாக எழுந்திரும் அம்புரீஷா.

அம்பரீஷன் தரு திருபுடை.

என்னையொருபொருட்டாக எண்ணிநீங்கள்வந்தவிதம்
புண்ணியரேஇப்பொழுது புகலுவீர்நீமுனிநாதா

நாரதன் தரு திருபுடை.

அன்னைபோல்குடியைகார்த்து அயோத்திதனைஆண்டுவரும்
உன்னிஉனைகண்டுசெல்வ உத்தமனேவந்தோமப்பா

அம்பரீஷன் தரு திருபுடை.

வந்தோமென்றமுனிநாதா வன்னஉங்கள்கிருபையாலும்
சந்திரமால்அருளாலும் சுகமுடன்இருக்கின்றேனே

பர்வதமுனி தரு திருபுடை.

க்ஷேமமதாய்இருக்குமெந்தன் சீருடையஅம்பரீஷா
காமமுமகற்றிமுந்தி காட்டில்வந்தவிதமென்ன

அம்பரீஷன் கவி.

அரசுசெங்கோலைதள்ளி அருவையென்புத்திரரோடு
முரசுடன்எல்லாநீக்கி முகந்தனைமனதில்கொண்டு
வரிசையாய்சடைதரித்து வனத்தினில்வந்துமாலின்
தரினம்கண்டுவந்தேன் சங்கதிஇதுகள்தானே

நாரதர் தரு.

காட்டினில்சென்றேனென்ற இராசனே
ஓமகாராஜனே
கண்ணனைகண்டாயோதான் இராசனே

அம்பரீஷன் தரு.

நாட்டமுடனேசென்று முனிநாதா
என்குருமுனிநாதா
நான்கண்டுவந்தேனே தான் முனிநாதா

பர்வதமுனி தரு.

எந்தவிதமாய்வந்தார் இராசனே
ஓமகாஇராசனே
என்னவரங்கள் தந்தார் இராசனே

அம்பரீஷன் தரு.

இந்திரன்போலேவந்து முனிநாதா
என்குருமுனிநாதா
எந்தனைசோதித்தாரே முனிநாதா

நாரதன் தரு.

சோதனைஎன்னசெய்தார் இராசனே
ஓமகாராசனே
ஆதிமூலமவரும் இராசனே

அம்பரீஷன் தரு.

கோவிந்தன்போலவந்து முனிநாதா
என்குருமுனிநாதா
கோவிந்தன் அருள் தந்தார் முனிநாதா

பர்வதமுனி தரு.

என்னவரங்கள்பெற்றாய் இராசனே
ஓமகாராசனே
ஏதேது அவர்சொன்னார் இராசனே

அம்பரீஷன் தரு.

கேட்டவரங்கொடுத்து முனிநாதா
என்குருமுனிநாதா
கிருபைசக்கரம்தந்தார் முனிநாதா

நாரதன் கவி.

கனமுடன்சிங்கப்செந்நாய் கரடியும்புலிகள்வாழும்
வனமதில்சென்றுநீயும் வண்மேசர்தபங்கள்செய்து
தினம்தினம்துதிக்கும்தேவர் இருடிகள்ரிஷிகள்காணு
ஜனார்த்தனன் தன்னைக்காணசந்தோஷம்கொண்டோம்தானே.

நாரதர் வசனம்.

ஏ அம்பரீஷா தினம் தினம் துதிக்கும் தேவர் இருடி ரிஷிகள் காணு கர்த்தனை கண்ணாரகண்டு வந்தாய் உன் பாக்கியமே பாக்கியம.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக பர்வதமுனியும் நாரதருமாகபேசி இருக்க அந்தசமையத்தில் அம்பரீஷன் குமாரத்தியான ஸ்ரீமதியானவள் தந்தையை காணும்படியாக சபைநாடி வருவது.

ஸ்ரீமதி வருகிறாள்கவி.

அதிவிதஅயோத்தியாளும் அம்பரீஷன்மகிழும்செல்வி
பதிபுகழ்வதனந்தன்ன பாவையும்எழுந்திருந்து
சதிருள்ளகண்ணின்மையும் தலையில்ராக்கடையுஞ்சூடி
மதிமுகவல்லிஸ்ரீ மதியிதோவருகின்றாளே.

தரு.

அம்மன் ஸ்ரீ மதியும்வந்தாள் அயோத்திநகர்
அம்பரீஷன் மகிழ்செல்விவாருள்

செம்மையுடனேவெகு சேடியருடன்கூடி
சேர்ந்துதந்தையைகாண வேண்டுமென்றேநாடி
உம்பர்மகிழ்ந்தஇவ ளாரோவென்றுபாடி
உத்தமிஇவளென்று உலகிலெவரும்தேடி

ஓங்கஅன்னமுங்கண்டு எங்கஇவள்நடைக்கி
பாங்காஉதடுகண்டு தாங்காகோவையும்நாணும் (அம்மன்)

திங்கள்முகமதனில் சோதிமிகவேவீச
திருவிழிதனைக்கண்டு சேலதுவென்றுபேச
கங்குல்கூந்தலைகண்டு மங்கியவும்கூச
காமன்கணைபழிக்கும் நேமப்புருவப்பிரகாசி

காதிலணிந்தகம்மல் சோதியதொளிக்க
ஆதிமூலமென்றவர் பாதந்தனை துதித்து (அம்மன்)

தந்தையைக்கண்டுஇன்று சந்தோஷமுடன்காண
சருணம்செய்துமே அவர்பாதந்தனையேபூண
அந்தஇடத்திலுள்ள அழகுஎல்லாநேதாண
அருவைஎந்தனுடனே தொடர்ந்துமிகவேநாண

அண்டர்முனிவர்களும் கண்டுஅதிசயிக்க
வண்டணிகூந்தல் மாதர்தெண்டஞ்செய்துமேவா (அம்மன்)

நீரில்ஆனைஇரங்க நீண்டமுதலைபத்த
பின்னையகரிஆதிமூல மென்றேகத்த
பாசில்முதலைகொன்று பதத்தில்கரியைசேர்த்த
பரந்தாமன்பதமதை துதித்தெழுதியேகித்த

பாடிகோவிந்தசாமி கூடிஉலகிலிதை
தேடிபரவச்செய்த நாடிபதத்தைகோரி (அம்மன்)

ஸ்ரீமதிதந்தையிடம் பணிவது தரு திருப்புகழ்மெட்டு.

தந்தையேஉன்னிரு பாதத்தில்பணிந்தேனே
கார்ப்பாயே இப்போ
சிந்தைமகிழ்ந்துமே செல்வியாம் உன்பதம் சேர்ப்பாயே

அம்பரீஷன் தரு.

வந்திடும்ஸ்ரீமதி சந்திரமகளே
வாழ்வாய்நீ இங்கே
எந்தனைத்தேடியேவந்திடும் சேதியையுரைப்பாய்நீ

ஸ்ரீமதி தரு.

ஆதிமூலனை பூஜைகள்செய்துமே
துதித்தேனே உனை
நீதியாய்கண்டபொழுதத்தில் பணியவந்தேனே

அம்பரீஷன் தரு.

செல்வியேஉனக்கு சிறுவர்களுடனே
விளையாட இல்லா
நல்லபொருள்களேது வேண்டுமோவதைசொல்லாட

ஸ்ரீமதி தரு.

வேண்டியபொருள்கள் தாயவர்தானே
விளையாட நான்
பூண்டிடபணியதும் பூமைமகிழ்ந்திடகொடுத்தாரே

அம்பரீஷன் தரு.

செப்புவாய்உனக்கு வேண்டியபொருள்கள்
இல்லாதை நல்ல
அப்பனும்அரிபாதம்அன்புடன் துதித்துமேசொல்வாயே

பொது வசனம்.

நாரதபர்வதமுனிகள் அம்பரீஷனிடம் இருக்கிற சமையத்தில் ஸ்ரீமதிவந்து பணிந்து தந்தையோடுபேச அப்போது நாரதர் அதிசயித்து சொல்வது.

நாரதன் ஸ்ரீமதியைப்பார்த்து சொல்வது

ஓடி தரு பல்லவி.

ஆ கா கா இதுவென்ன தோற்றம்
அருவைபோல்உருவமாய் தெரியுதேகண்ணெதிர் (ஆகா)

அநுபல்லவி,

பாகாசந்திரனையும் பழிக்குதேஇவள்முகம்
பல்லோ முத்தையும் கூட
சொல்லோ யீடதவுமே
யல்லோ கோவைவிதழு
மல்லோ புருவம்மதன்
வில்லோ இவளைப்போல்

ஆகாநான்கண்டதில்லை லோகாலோகத்திலேயும்
சாகாவாரும்வரும் ஏகாந்தமாய்கூடினல். (ஆகா)

சரணங்கள்.

இமையமலைபோ ஸ்தனம்
உமையுமீடோ சொல்ல
சமையம்பார்த்து பிர்மன்
அமையபடைத்திட் டானே

அந்திர மங்கையபோ அல்ல
அனங்கன்சேர் நங்கைபோ
இவள்என்வந்தாள் இங்கையே உரு
நோக்கினல் சங்கையே

திருமாலின்தேவியுமிவ எல்லவே வேறு
அருவைஇவளுக்கிடு சொல்லவே

ஏது ஏது இனிஎன்மனந் தாளாது
வேதனையாகுதே வேண்டினல்வருவாளோ (ஆகா)

பொது வசனம்.

இப்படியாக நாரதர்பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டு இருக்க அப்போது பர்வதமுனி பார்த்து சொல்வது.

பர்வதமுனிசொல் தரு. (வேறுசீர்)

காண்பதும்உண்மையோ கனவோயிதென்னிட
கண்களின்தோற்றந்தானே கானஒளிவோயிது (காண்)

காண்பதும்உண்மையிது கனவல்லஎன்னினைவிதே
கண்டிடும்ஒளியல்ல கருதமுருவமே(காண்)

மண்பாவையோபசும் பொன்பாவையேயிது
மாதேதான்அசைவதால் நீதோன்றில்லைபோதான் (காண்)

அண்டர்தேவிமாருனல் அவனியில்படாதேபாதம்
அல்லரிஷிபத்தினிக்கு ஆபரணங்களேது (காண்)

ஆபரணபலிதம் அணிந்தபெண் ஆகையாலே
அரசர்தன்பெண்ணோஇவள் ஆகாஎன்னென்று (காண்)

கன்னிகையகாணகாண காதல்மீறுதேமனம்
கண்டால்அரசன்மீதுநன்றோஅய்யய்யோஎன்னசொல்வேன்(கா)

ஸ்ரீமதி தந்தையிடம் சொல்வது கவி.

தந்தையேஎனக்குஇப்போ தகமைசேர்பொருள்களெல்லாம்
சிந்தனையில்லாமல்தான் செய்துமேதந்தார்தாயார்
உந்தனின்கிருபைதானும் ஓங்கியேஎந்தன்மீது
விந்தையாய்இருந்தால்போதும் வீட்டுக்குசென்றுவாரேன்.

வசனம்.

கேளும் தந்தையே எனக்கு வேண்டியதெல்லாம் தாயார் தந்துவிட்டார் தங்கள்கிருபை இருந்தால் போதும் போய்வருகிறேன்.

நாரதர் அம்பரீஷனைபார்த்து சொல்வது தரு.

அரசனெனும்அம்பரீஷா அரைவேன்கேளுமே
அருவைமாது அவள் தான் யாருதெரியஒதுமே
தெரியஒதுமே எனக்கு புரியஒதுமே

அம்பரீஷன் தரு.

அருமுனியேசுவாமியிப்போ அரைவேன்நானுமே
தெரிவையெந்தன்செல்விதானே புரிவீர்நீருமே
அரிவீர்நீருமே நன்றாய் அரிவீர்நீருமே

பர்வதமுனி தரு.

செல்வியானல்சந்தோஷம்தான் தெரியும்ராசனே
திருமணங்கள்நடந்துபோச்சே உரையும்நேசனே
உரையும்நேசனே மகா பிரியவாசனே

அம்பரீஷன் தரு.

மகளுக்கேற்றமன்னர் ஒருவர்தேடுரேனிப்போ
மணமும்ஆகவில்லை தானே வாடுரேனிப்போ
வாடுரேனிப்போ எங்கும் நாடுரேனிப்போ

நாரதர் சொல் கவி.

மன்னவாவந்துகண்டேன் மாபெறுமக்ஷேமமெல்லாம்
இன்னிலம்பதிக்கும்பாலா இப்போதேசென்றுவாரேன்

பர்வதமுனி சொல் கவி.

உன்னிடம்அயோத்திராட்டின் உகந்திடும்அம்பரீஷா
பின்னுலேவாரேன்நானும் போய்வாவிடைதாராயே.

அம்பரீஷன் சொல் கவி.

நாலாறுவேதந்தன்னை நன்மையாய்உணர்ந்தமிக்க
மேலானமுனியேஉங்கள் மேன்மைசேர்பாதங்கண்டேன்
சாலனும்அணுகான்என்னை கருஎன்தவத்தின்வாறே
சேமமாய்சென்றுநீங்கள் சித்தமாய்வருகுவீரே.

நாரதர் அம்பரீஷனிடம் விடைபெற்று போவது தரு.

வாரும்பர்வதமகாமுனியே மகாமுனியே
வனத்தில்தவஞ்செய்யலாம்இனியே நீஇனியே

பர்வதமுனி தரு.

தவஞ்செய்யசெல்வேநான்தானே இனிதானே நீ
தனித்துஉலகம்சுற்றுவோனே நீ தானே

நாரதர் தரு.

அயோத்திநகர்தாண்டிவந்தோம் நாம்வந்தோம்
அடர்ந்தவனம்தனிலேநொந்தோம் இன்றுநொந்தோம்

பர்வதமுனி தரு.

மிருகம்வாழ்வனந்தாண்டிநடந்தோம் இப்போர்தொடர்ந்தோம்
அருமுனிதபம்செய்யகண்டோம் இங்கேகண்டோம்

நாரதமுனி தரு.

திரிலோகம்சுற்றப்போரேன்சொல்லும் இப்போசொல்லும்
திடமாய்இந்தவனத்தில்நில்லும் நீர்நில்லும்

பர்வதமுனி தரு.

வனந்தனில்குகைதேடிதானே இன்றுதானே
வண்மைதபம்புரிவேன்நானே இதோநானே

நாரதன் கவி.

பாசாங்குசெய்துஇப்போ பர்வதன் தன்னைநானும்
தாசாவாய்அனுப்பிவிட்டேன் சடுதியில்சென்றுஇப்போ
ராசாவாம்அம்புரீஷன் நருஞ்செல்விஸ்ரீமதியை
நேசமாய்கேட்டுஇப்போ நின்னையமணஞ்செய்வேனே.

வசனம்.

இப்போதென்ன பர்வதமுனி தபம்செய்ய போய்விட்டான் இனி அம்பரீஷனிடம்சென்று மகளைபேசி விவாகம் முடிக்கவேண்டியதுதான்.

நாரதர் தரு.

ஆனந்தமாய்நடப்பேன் அயோத்திக்கு
ஆனந்தமாய்நடப்பேன்

ஆனந்தமாய்இன்று அருமுனிபர்வதன்
தானேஏமாந்திட்டான் சமையமிதுவென்று (ஆனந்த)

அம்பரீஷன் நாரதனைகண்டுசொல்வது கவி.

அருமுனிநாதாஇப்போ அகன்றீரேகொலுவைவிட்டு
திரும்பியேவந்தசேதி தெரிவிப்பீர்இப்போநீரும்.

நாரதன்சொல் கவி.

வருணமகள்வருகாவண்ணம் வனகப்படிஅரசுசெய்யும்
பெருமைசேர்அம்புரீஷா பேசுவேன்கேட்பாய்தானே.

நாரதர் தரு.

வந்திட்டேன்உந்தனை சிந்தைமகிழ்ந்தொன்றுகேட்க
நொந்திடாதபடிதந்து அனுப்புவாய்பார்க்க

பர்வதமுனி தரு.

சொல்லிட்டால்உந்தனுக் கல்லாதுவேறெவர்க்கோது
அல்லலில்லாமலே எல்லாஞ்சொல்லுமிப்போது

நாரதர் தரு.

உந்தன்மகள்தனை விந்தையாம்திருமணம்நானே
சுந்தரமாய்செய்ய சிந்தையில்நினைத்துவந்தேனே

அம்பரீஷன் தரு

வேதங்களுணர்ந்த நீதமுள்ளஎந்தன்நாதா
போதசற்றுநேரம் யோசித்துசொல்வேன்வேதா

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக நாரதன் ஸ்ரீமதியை கேட்க அம்பரீஷன் யோசித்து சொல்வதாகசொல்ல அப்போது பர்வதமுனியும் அவ்விடம் வருகிற விதம்காண்க.

பர்வதமுனி தரு.

இதுநல்லநேரம் இதுநல்லநேரம்
என்றைக்கும்வாய்க்காது இந்தப்பிரகாரம்

அதிதுரூசாக திருலோகம்சுற்ற
அருமுனிநாரதன் சென்றானேமிக்க
சென்றதால்இப்போ நன்றாகநானும்
செல்லுவேன்அயோத்தி நன்றிந்தநேரம
நன்றிந்தநேரம் நான்சென்றுராஜன்
நருமகள்தனைகலியாணம் செய்வேனே
இல்லைஎன்றாலே பொல்லாதசாபம்
எல்லாமுதந்து வருவேனேகன்றுஇன்று
சொல்படிதந்தால் திருமணம்செய்து
சுத்தமாய்வருவேனே இதுநன்றுஎன்றும்
கலியாணம்செய்தால் காட்டில்செல்வேனே
கடுந்தபம்தனே இனியென்றும்வேண்டேனே
சலியாமல்அயோத்தி தானேவந்தேனே
தந்திரமாய்கேட்டு முடிப்பேனேகானே

அம்பரீஷன் பர்வதமுனியைகண்டு ஏதென்றுசொல்வது தரு.

வாரும்வாரும்முனிநாதா இப்போ
வந்துசென்றீரோநீர் தோதா
ஏதேதுகாரியம் இப்போதுசென்றீரே
கூறும்கூறும்நாதா குழந்தைபணிந்தேனே

பர்வதமுனி தரு.

போன்போன்றமனமுள்ள பூபாஉனக்கு
புரியஉரைப்பேன்கேள் தீபா
மன்னனேநீருமே மரைவாகவாருமே
இன்னமேன்யோசனை சொன்னேனேகேளுமே

பர்வதமுனி வசனம்.

ஏ அம்பரீஷா எழுந்து இப்படி மரைவாக வாரும் சொல்கிறேன்.

அம்பரீஷன் தரு.

வந்திட்டேன்நான்முனிநாதா நீர்
சிந்தைமகிழ்ந்திட வாதா
சந்தோஷமாகவே வந்தசேதிதன்னை
சுந்திரமாகவே எந்தையேசொல்லுமே

பர்வதமுனி தரு.

சுபகாரியம்ஒன்றுபேச உனை
சிந்தித்துவந்தேநான் லேசா

சுபமாகசொல்லாமல் அருணவடன் மகள் தன்னை
விவாகஞ்செய்யவென்று வேண்டியேவந்தேனே

அம்பரீஷன் கவி.

இதுவென்னமோசம்மோசம் இரண்டாட்டின்நடுவிற்பட்டு
சதிபடும்நரியைப்போல சகரிடலாச்சதிப்போ
விதிஇதோ அயன் விதித்த வேலையோ அரியேயுனைப்போ
பதிபுகழ்மாலேஎந்தன் பாந்தாமாளென்னசெய்வேன்.

அம்பரீஷன் புலம்பல் தரு.

ஆதிமூலா அரிகோவிந்தா
அய்யய்யோநான் என்னசெய்வேன
சோதிசிலா சுடரொளியே
சந்திராவுன் சூதிதுவோ (ஆதிமூலா)

அரியதவங்கள் செய்து
அன்பாகபெற்றமே உய்து
பிரியங்கொண்ட இருவருக்கும்
பெருமானேஎன்ன திக்கோ (ஆதிமூலா)

இல்லையென்று நானும்சொன்னால்
என்னசாபமோதான் பின்னால்
தொல்லைக்குள்எந்தனை இப்போ
சந்திராசெய்தாயே மெய்ப்பா (ஆதிமூலா)

உன்னையன்றி உலகிலமேலா
உற்றதெய்வமேது சிலா
என்னைவந்து ஆளுவாயா
ஈசனேபக்தர் சகாயா (ஆதிமூலா)

அம்பரீஷன் இருமுனிவருக்கும் சொல்வது கவி.

அருமுனிவோரேஇப்போ அரிவிப்பேன்சேளுமய்யா
இருவருங்கேட்பதாலே எல்லாமுந்தெரிந்தநீங்கள்
வரும்சுயவரநாள்வைத்து வையத்திஅரசரெல்லாம்
சரிவரவருவார்மாலை தையலாபோடுவாளே.

அம்பரீஷன் வசனம்.

ஆனால்கேளும் சுவாமிகளே தாங்கள் இருவரும் கேட்பதாலே என்னசொல்லப்போறேன் எங்கள் வழக்கப்படி சுயவரம் ஏற்படு

த்துகிறேன் உலகத்து அரசரெல்லாம் வருவார்கள் நீங்களும் வாருங்கள் உங்கள் இருவரில ஸ்ரீமதியாரைவரித்து மாலைபோடுகிறாளோ அவருக்கு விவாகம் முடித்துவிடுவோம் முனிநாதர்களே.

முனிவர் வசனம்.

அப்படியானால் நாங்கள் போய் வருகிறோம்.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக சுயவரத்துக்கு முனிவர்கள் வருவதாக சொல்லிப்போக இந்தசேதியை மனைவிக்கு தெரிவிக்க அரசன் அழைக்க, அம்பிகைவந்து பணிந்துகேட்பது.

அம்பிகை தரு.

சரணம்புரிந்திட் டேன்நாதனே
என்னையழைத்தவயணம்தனை உரையும்போதனே
கருணையுடையநாதா கருதிஒருபொருட்டாய்
அருமைதனையழைத்த அருணசேதியுரைவேதா

அம்பரீஷன் தரு.

எந்தன்மனதிற்கேற்ற மங்கையே
நீஎன்னாளும்வாழ்ந்திருப்பாய் நங்கையே
சந்தோஷசேதிஒன்று தையலாரேஇங்கையே
உந்தனுக்குரைத்திடஒகோ அழைத்தேனதங்கியே

அம்பிகை தரு.

என்னசேதியோ யதுஉரைப்பாய்
அதைஎந்தனுக்கறிந்திட செழிப்பாய்
பன்னகசயனன் பகவான் அருளைக்கண்டாய்
இன்னம்என்னகண்டாய் எனக்குஉரைப்பாய்நன்றாய்

அம்பரீஷன் தரு.

மானேஉரைப்பேன் நான்கேளுமே
சுபமுகூர்த்தம்கானேவைத்தேனே இங்கேதோணுமே
நானேஸ்ரீமதிக்கு நல்லமுகூர்த்தம்
தான்பார்த்துசுபவாம் தையலேவைத்தேனேசத்தம்

அம்பிகை வேறு தரு.

அரசர்எவரைப்பார்த்தீரோ அதையெனக்கு
வரிசையுடனே ஏர்ப்பீரோ
வரிசையாய்அன்பத்தார் வகைசேர்அரசமாரில்
சரசமாய்எந்தராஜர் தானேநேமிததீர்நேரில்

அம்பரீஷன் தரு.

படைமன்னரெவரில்லையே மாதேயதினால்
தடைமிக்கதானே தொல்லையே
சடைமுடிதான்தரித்து சாரங்கள்தன்னைபோற்றும்
நெடிபெறும்நாரதர் கெம்பீரபர்வதன்எற்றும்

அம்பிகை வேறு தரு.

அய்யோவிதுஎன்னமோசம் மோசம்நாதனேஅந்த
தையலரிஷிக்குதா போமோதுய்யனே

அம்மரீஷன் தரு.

பாசபந்தம்தன்னைநீக்கி பகவானின்மீதுஎன்றும்
நேசமுடன்பாடுவோர்க்கு தாவும்என்வாது

அம்பிகை சரு.

அவரைவிடஉலகில்அரசர் எவரும்இல்லையோஇந்த
தவருதலாய்இல்லைஎன்று சொல்லத்தொல்லையோ

அம்பரீஷன் தரு.

முனிவர்வந்துகேட்கும்போது இல்லைஎன்பனோநீ
கனிவாய்வந்துசொல்லவந்தாய் கன்னியேதானே

அம்பிகை கவி.

உன்னிதநாதா நீரும் உரைத்திட ஒப்பமாட்டேன்
அன்னிதமாக அந்த அருமுனிதங்களுக்கு
கன்னியாம் என் தசெல்வி கடிமணந்தரவுமாட்டேன்
வன்னமாம்முனிவர்வந்தால் வகைசொல்லி அனுப்புவீரே.

அம்பிகை வசனம்.

கேளும்நாதா நீர்சொன்னால் சம்மதபடவும்மாட்டேன் மகளை முனிவருக்கு கொடுக்கமுடியாது முனிவர்வந்தால் சொல்லி அனுப்பிவிடும் நாதா.

அம்பரீஷன் கந்தார்த்தம்.

பத்தினிமாதே கேளும் பரந்தாமன் உற்திதன்னில்
மெத்தவே உதித்துவந்து மேதினி படைக்கவல்ல
சத்தியலோகபிர்மன் தனக்குமே செல்வனாக
நத்தியே உதித்துவந்த.

தரு.

நாரதபிர்மமாகுமே — அவரைவிட
வேறோ உனக்கப் — போருமோ
சிதாபிர்மரிஷ்டன் — செப்புவேன் பர்வதமுனி
வேறொதுபயுரைக்காதே — வீண்சாபம்வந்துநேரம்

அம்பரீஷன் வசனம்.

அடிமாதே நாரதர் பிர்மகுமாரனும் பர்வதமுனி பிர்மரிஷ்டன் ஆசையால் அவரைப்பற்றி இங்கே ஒன்றும் சொல்லாதே.

அம்பிகை கந்தார்த்தம்.

நாதா நான் உரைப்பேன் கேளும் நாரதன் உலகஞ்சுத்தி
வேதாவே கலகஞ்செய்யும் வீணனும் தவனுமாச்சே
ஆதாரமில்லாகாட்டில் அந்நாசக்கை கழுதபோல
சாதாவாய்ச்சடைதரித்து

தரு.

தவஞ்செய்யும் ரிஷி — ஆச்சதே
பர்வதமுனி அவலமிரவும் — போச்சதே

கவனமாய்இம்முனிகட்கு கன்னிஸ்ரீமதியை
விவாகஞ்செய்யவேயிக்க வேண்டேன்வேண்டேனே நாதா

அம்பரீஷன் தரு.

என்னடிநீ படுதோஷி
இங்கேஏசமாய் பேசுராய்விஷி
மன்னமன்னரெல்லாம் மாமுனிதங்கட்கு
இன்னிலத்தில்தூசி யாவனோநீபேசி

அம்பிகை தரு.

வித்தையெல்லாம் இங்கேகாட்டாதே
இந்தபத்தினிமுன் கையைநீட்டாதே
சித்துவித்தையெல்லாம் செப்பினபோதிலும்
உத்தமிமகளை ஒருபோதும்தருகேனே

அம்பரீஷன் தரு.

தருகேன் தருகேன் என்றுபேசாதே
அடிதையலே வீணாகவீசாதே
சரியாகமகளை தையலேநீபார்த்தா
தருபவள்நீதானே தண்டிப்பேன்இப்போதே

அம்பிகை தரு.

வதைசெய்வேனென்று மேசொல்லாதே
வம்புகள்பேசிநீ நில்லாதே
கதைபோலவே இங்கே காட்டுறாய்நீமிக்க
இதைபோலஎங்குமே இல்லையேதான்ஒக்க

அம்பரீஷன் கவி.

அருவையரோகானும் வெகுநேரமாக
அநேகவிதமாகசொல்ல அதற்கதற்கு
இருவமதாய்பதில் அதுவும் சொல்லுகின்றாய்
இட்டியேஉந்தனையும் நானுமிக்க
தருணமென்றுபார்த்திருந்தேன் இருக்காதாலே
தண்டித்தேன் உந்தனையும் நீயுமிப்போ
கருமலர்கள்சூடிடும் மாதரோடு
கங்கையேஅந்தபுரம் சென்றுவாயே

அம்பிகை அரசன் தண்டிக்க புலம்பல் தரு.

மகளேஉந்தனைபெற்று மாமுனிதங்கட்கு
மனம்வந்செப்படிகொடுப்பேன் அயயய்யோநான்
மனம்வந்தெப்படிகொடுபபேன்
அகமகிழ்வாசநான் அரசர்ஒருவருக்கு
அளிததுகொடுத்துமே களிததுப்பாருமலே (மகளே)

ஸ்ரீமதி அம்பிகை புலம்புவதைகண்டு ஏதென்று கேழ்ப்பது கவி.

எந்தனைப்பெற்றெடுத்த எழில்பெருந்தாயேஇப்போ
சிந்தையும்வெவ்வேறாகி சிதரியேமனமும்வாடி
பந்தமாய்மகளேஎன்று பதரியேஅழுவதென்ன
நிந்தகம்செய்திட்டேனே குழந்தைக்குஉரைசெய்வாயே.

அம்பிகை தரு.

அன்னநடையழகி என்னம்மா என்மகளே
அதிரூப சித்திரமே
என்னென்றுநான்சொல்லுவேன்என்னம்மா என்மகளே
என்மனம் தாளுமோதான்

(கருள்) எடுத்து சொல்ல கடுக்குதம்மா
விப்பபோமென்றால் நடுக்குதம்மா (அன்ன)

ஸ்ரீமதி தரு.

என்ன கஷ்டந்தான் சொல்லும் என் தாயே வெகுவாக நீயே
னைமுகிலாய் நில்லும்
பலலகனருளிருக்க என் தாயே வெகுவாக நீயே
பதரிட வந்ததென்ன

(சுருள்) பத்திமனம் கத்திநீயும் இத்தலத்தில் மெத்தவழ (என்)

அம்பிகை தரு.

மகளே உனை வளர்க்க என்னம்மா என் மகளே
மாளாத கஷ்டப்பட்டு
சுகமாக வளத்திட்டேனே என்னம்மா என் மகளே
சுபமுகூர்த்தம் வைத்தாரே

(சுருள்) சத்தமுடன் ஒத்துமனம் பித்தத்துடன் மெத்தத்தா (மக)

ஸ்ரீமதி தரு.

எத்தனை காலமட்டும் என் தாயே வாடுவாயே நீயே
இருந்திட்ட போதுமோதான்
பெத்ததாய் வீடுதாச்சே என் தாயே சொல்லுவாயே நீயே
பெண்ணெனக்கு சொந்தமா

(சுருள்) புலம்பிமனங்கலங்குநீயும் அலைந்தழவும் அழகாகுமோ (எ)

அம்பிகை கவி.

பெத்ததாய்வீடு தென்ற பெண்ணுனமகளே கேளாய்
எத்தனையோ அரசர் இருந்திட உலகந் தன்னில்
அத்தனை நீக்கிதந்தை அருமுனிதங்களுக்கு
சத்தமாய்தருவதாக சுபமுகூர்த்தம்வைத்தாரே.

அம்பிகை வசனம்.

கேளும்மகளே உலகத்தில் எத்தனையோ அரசர்கள் இருக்க உமது தந்தை நாரதர் பர்வதமுனியாகிய இந்தமுனிகளுக்கு தருவதாக சொன்னாரே என்ன செய்வேன் மகளே.

ஸ்ரீமதி கவி.

தலைவிதியொன்றிருக்க தப்பியே நடக்காதம்மா
தலைவிதியாரையெண்ணம் தவித்து நீ அழுகலாமோ
தலைவிதியதனைப்போல தங்கியே நடக்குமென்று
தலைவிதிதன்னை எண்ணி தாயே நீ இருந்திடாயே

வசனம்.

கேளும்தாயே தலையில்பிர்மன் எழுதியபடிநடக்குமென்றி தப்பிநடக்காது தலைவிதியை எண்ணிஇரும்தாயே.

அம்பரீஷன் கவி.

மந்திரிசொல்லக்கேளாய் மாதுஸ்ரீமதியதான
சுந்தரசெல்விக்காக சுயவரம்என்றுசொல்லி
விந்தைசேர் அன்பத்தெட்டு விதமுள்ள அரசர்க்கெல்லாம்
பந்தமாய்முகூர்த்தஓலை பரிவுடன அனுப்புவாயே.

வசனம்.

கேளும் மந்திரிமாரே எனதுசெல்வியான ஸ்ரீமதிக்கு நிகழும் .... வருஷம் சித்திரை மாதம் 9 ந்தேதி சுயவரம் என்று உலகத்து அரசர்க்கெல்லாம் முகூர்த்தஓலை அனுப்பும் மந்திரிகளே.

மந்திரி வசனம்.

அப்படி தங்கள் உத்திரவுபடி அனுப்பிவிட்டேன் அரசே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக சுயவரம் ஏற்படுத்தி முகூர்த்த ஓலை அனுப்பியசேதிகேட்டு நாரதர் வைகுந்தம்நோக்கி செல்வது.

நாரதர் வைகுந்தம் நாடி செல்வது தரு.

பருவமுடையமாது மணக்க மனம் அருவைஸ்ரீமதியை களிக்க

பருவதமுனிதானே கிருவங்கொண்டுமே அவன்
அடுக்க நானும் கெடுக்க
வானரம்போலதானே யீனன்முகமதனை
செய்ய அஜும் சய்ய
நாதன்விஷ்ணு அவரை நீதமுடனேசென்று
வரமே கேட்பேன் திடமே
நத்தம்வாழ்ஜம்புலிங்கன் பத்தன்கோவிந்தனுமாய்
எழுத உலகில் புகழ
சிங்காரஸ்ரீமதி இங்கிலீஷ்நோட்டதன்படி
தானே எழுதி னேனே
குற்றமிருக்கக்கண்டோர் பெற்றகுழந்தையென
நீக்க மனம் தாக்க
கேட்டுபணிந்துநானும் காட்டமாய்விஷ்ணுஇருக்க
கண்டேன் பணிந்து கொண்டேன் (பருவமு)

நாரதன் விஷ்ணுவைக்கண்டு பணிவது தேவாரம்.

உலகனைதயளந்தாய்போற்றி உம்பர்கட்கரசேபோற்றி
அலகைபால்உண்டாய்போற்றி அரிவாசுதேவாபோற்றி
மலையதைசுமந்தாய்போற்றி மானிலந்தன்னில்எந்தன்
சலியாததுயரைதீர்க்கும் தற்பராபோற்றிபோற்றி.

மகாவிஷ்ணு தெள்ளுதமிழுக்குதவு காவடிச்சிந்துமெட்டு.

திரிலோகம்சுற்றிடும் தீரா இங்கே
தேடிவயவக்தவிதத்தைக் கூரா
சித்தமு மகிழ்ந்துஇங்கே உத்தமனே வந்தசேதி
ஏது அதை ஓது

நாரதர்சொல் ஷை மெட்டு.

ஓதுவேன்உந்தனை நானும் தேடி இப்போ
ஓடியேவந்தேனேமிக நாடி
உத்தனே வரமொன்று சித்தமு மகிழ்ந்தெனக்கு
தாரும் கண்ணால் பாரும்

விஷ்ணுசொல்.

பாருமென்றுரைத்ததுவும் ஏது அதை
பாலனேஇப்போமுன்னில் ஓது
பாதத்தில் குரடசைபவேதத்தை ஸ்கையில்பிடிக்கும்
முனியே சொல்வாய் இனியே

நாரதர் சொல்.

இனியஸ்ரீமதியென்னும் மாது நான்
இன்பமாய்மணமுடிக்க தோது
ஏந்திழையை பர்வதனும் சாந்தமுடனே எண்ணுறுன்
தானே பார்த்தேன் நானே

விஷ்ணு கவி.

நானிலமெல்லாம்போற்றும் நாரதாநீயுமந்த
தானுடலதையரிந்த தவமுனிபர்வதனுமாக
வானுலகெல்லாம்போற்றும் வனிதையைஇச்சித்தாக்கால்
நானதற்கென்னசெய்ய நாரதாஉரைசெய்வாயே.

வசனம்.

கேளும் நாரதா அந்த ஸ்ரீமதியை நீயும் பர்வதனுமாக விவாகஞ்செய்ய எண்ணினல் நான் அதற்காக என்னசெய்யவேண்டியது சொல்லுமப்பா நாரதா.

நாரதர் ஓடி கந்தார்த்தம்.

சொல்லுவாய்என்ற வல்லவாகேளும்

சென்னை-600 006.
148390.

தரு.

சுத்தகுரங்கின்முகமாய் பர்வதனுக்கு
மெத்தத்தருவாய் இதுவே
உத்தமனேஇந்த ஒருவரம்தந்தாலே
பத்தினிஎனயன்றி பர்வதனேஎண்ணுளே

விஷ்ணு ஓரடி கர்தார்த்தம்.

பத்தர்கள்கேட்டும் உத்தமவாத்தை

தரு.

பாரில்தருபவனுச்சே உந்தனுக்கு
கோரிதருகவும் ஆச்சே
சீராய்வரந்தருகும் திருமால்நானுமிருக்க
கோராய்வேறுஎண்ணுதே இன்னையமாகதந்தேன்

வசனம்.

கேளும் நாரதா நான் பக்தர்கள்கேட்டும் வரத்தை கொடுப்ப வன்நான் ஆகையால் உன்கோரிக்கைபடி தந்தேன் சென்றுவாரும்.

நாரதர் துதி.

குலந்தருஞ்செல்வந்தந்திடுமடியார்படுக்துயராயினவெல்லாம்
நிலந்தருஞ்செய்யும்நீளவிசும்பருளும் மருளொடுபெருநிலமளிக்கும்
வலந்தருமமற்றுமதந்திடும் பெற்றதாயினும்ஆயினசெய்யும்
நலந்தருமசொல்லைநான்கண்டுகொண்டேன் நாராயணவென்னும்
[நாமம்.

நாரதர் வசனம்.

ஆ கா என்னபாக்கியம் இந்த ஆதியந்தமிலாத மாதவன் என் பக்திக்கு கட்டுபெட்டார்போலும அவர் அருள் இருந்தால் கைகூடாது ஒன்று என்பாக்கியமேபாக்கியம் நான் சென்று வருகிறேன் சுவாமி.

விஷ்ணு வசனம்.

போய்வாரும் நாரதமுனியே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக நாரதன் வரம்பெற்று செல்ல அப்போது பர்வதமுனி வைகுந்தம்நாடி வருவது

[library stamp]

பர்வதமுனி கவி.

கதிர்குலம்தனிலுதித்த கன்னியாளானஸ்ரீ
மதியெனும்மாதானும் மாமுனிநம்மையன்றி
பதிபுகழ்நாரதன்தன்னை பத்தினிவாசத்தானால்
அதிவிதவெட்கமல்லோ அரியிடம்ஏகுவேனே.

பர்வதமுனி வசனம்.

இப்போதென்ன வைகுந்தம்வந்துசேர்ந்தோம் இனிபகவானை பணியவேண்டியதுதான்.

பர்வதமுனி கவி.

மூலமேஎன்றஆனை முக்கியமுதலைக்காக
ஓலமிட்டிடவேமுன்னில் ஓடிநின்றவனேபோற்றி
பாலனுமானஇந்த பர்வதன துயரந்தன்னை
சீல்மாய்தீர்த்துவைக்கும் திருமாலேபோற்றிபோற்றி.

விஷ்ணு கவி.

இன்னிலந்தன்னில்நல்ல இணையிலாவேதசாஸ்திரம்
பன்னிடும்நிபுணறன் பர்வதமுனியேவாரும்
என்னையுமநாடிதேடி இவ்விடம்வந்தசேதி
உன்னியேநீயுமிப்போ உரைசெய்வாய்உரைசெய்வாயே.

விஷ்ணு வசனம்.

ஏ பர்வதமுனிவரே வந்தசேதிஎன்னஉரைசெய்யும்.

பர்வதமுனி சொல் அகவல்.

சொல்லுவாய்என்ற சுந்திரமாலே
வல்லவனான வசுதேவமைந்தா
அதிவித அயோததி அம்பரீஷராஜன்
விதமுடன்பெற்ற விளஞ்செல்வியான
அருமைஸ்ரீமதியை அன்பாககாணும்
பருவமதாக பார்த்துமேமணஞ்செய்ய
எண்ணமுங்கொண்டேன் இதறகெதிராக
நண்ணுநாரதன் நலமுடன்தானும்
அப்படித்தானே அவனுமேஎண்ணினான்
இப்போதுகேட்கும இனியதோர்வரமாம்

கோலாங்கூலம்ளனும் குரங்கின்முகமாய்
சீலன்நாரதனை செய்திடவேண்டும்
பெண்ணுக்குமட்டும் பெருங்குரங்காக
கண்ணுக்குத்தெரியக் கருள்புரிவீரே
இந்ததோர்வாத்தை யீய்ந்துமேஎனக்கு
தந்துஇரட்சிக்க தற்பராபோற்றி.

விஷ்ணு ஒரடி தரு.

பத்தர்க்கு உத்தமன்யான் சித்தமும் களித்து அளித்தேனே

பர்வதமுனி தரு.

நத்திநாரதனுக்கிந்த உத்தசேதிதன்னை உரைக்காதீர்

விஷ்ணு தரு.

உந்தனின்வார்த்தைக்கு ஒப்பதுவும்கொண்டேன்நான்தானே

பர்வதமுனி தரு.

சிந்தைகளித்துமே சென்றுவருகின்றேன் பணிந்தேனே

விஷ்ணு தரு.

நல்லமுனிவனே செல்லவிடையது தந்தேனே

பர்வதமுனி தரு.

சொல்லவுன்வலிமையை எல்லேயில் எப்படிசொல்லுவேனே

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக பர்வதமுனி விஷ்ணுவைக்கண்டு நாரதன் முகம் குரங்கின்முகமாய் போகும்படி வரமகேட்டு பெற்றுக்கொண்டு அயோத்திவா அப்போது அம்பரீஷன் பர்வதமுனியைகண்டு சொல்வது.

அம்பரீஷன் கவி.

தவமதில்சிரந்துகல்ல தண்மைசேர்உலகிலெந்தன்
பவமதையொழிக்கவந்த பர்வதமுனியேவாரும
கவனமும்வைத்தஎன்மேன் கடுகிஇவ்வாசனத்தில்
சிவமதைபோலநீரும் சித்தம்வைத்தமாவீர்போற்றி.

அம்பரீஷன் வசனம்.

இவ்வாசனத்தில் அமர்வீர் சுவாமிமுனிநாதா.

பர்வதமுனி வசனம்.

அப்படியே உன் இஷ்டப்படி அமர்ந்தேன் இராஜனே.

பொது வசனம்.

இந்த படியாக பர்வதமுனி வந்து அமர்ந்திருக்க நாரதர் வது.

நாரதன் கவி.

இன்றுமேஸ்ரீமதிக்கு இன்பமாய்சுபமுகூர்த்தம்
நன்றதுவாச்சுதிப்போ நலமுடன்நா னும அங்கே
சென்றுமேமாலைசூடி செல்வியைமண முஞ்செய்ய
அன்றுமேசொன்னதுவைப்போல அரைக்ஷணமஏகுவேனே.

நாரதர் தரு.

அயோத்தியாபுரியைநாடியே நாரதமுனி
அன்பாய் மிகவும் ஓடியே
அயோ ததியாபுரியைநாடி அம்பரீஷன் தனைதேடி
ஆவலுடனமேவிதாவி கூவியேஅரியைபாடி (அயோ)

அம்பரீஷன் நாரதனைக்கண்டு பணிவது கவி.

என்னையோர்பொருட்டாய்எண்ணி இதமுடன்வந்தநல்ல
நன்னையமுனியேஇங்கே நலமுடன் அமருவீரே.

நாரதர் கவி

உன்னிடமொழியைப்போல உளமதுசந்தோஷித்து
தண்மைசேர்ஆசனத்தில சந்தோஷமாய்அமர்ந்தேன்

அம்பரீஷன் வசனம்.

ஏ சுவாமி என்ன பொருப்பாய்வந்தீர் என்பாக்கியமே பாக்கியம் இந்த ஆசனத்தில் அமரும்.

நாரதர் வசனம்.

அப்படியே அமர்ந்தேன் அம்பரீஷா.

பொது வசனம்.

இந்தப்பிரசாரமாக அமர்ந்திருக்க உலகத்து அரசர் வருவது.

அரசர் கவி.

இன்பமாய்உலகிலுள்ள இராஜர்கள்பதியிதானோ
துன்பத்தைதீர்த்துவைக்கும் தூயன்வாழ்வைகுந்தமோதான்
என்றுமேசொல்லஒண்ணு எழிலபெரும்மண்டபத்தில்
அன்பத்தர்தேசராஜர் அனைவரும்வருகின்றாரே.

அரசர்கள் தரு.

அயோத்திநகற்குசெல்வோம் அனைவர்களும்வாரும்
மெய்யாளனையன்றியுனைத் தேடுவாளோபாரும்
தேடுவாளோஉன்னைத்தானும் திரமோமிகபோங்காண்
நாடுவாளோஎன்னையன்றி நானிலத்தில்ஏங்காண்
நானிலத்தில்மன்மதன்தான் ஞாயம்சொன்னாய்ப்போநீ
ஏனிதனைசொல்லவந்தாய் எட்டநில்லும்சேநீ
எட்டநின்றுபார்த்தபோதும் எண்ணுவாளோஉன்னை
மட்டியைப்போல்பேசுகின்றாய் மணக்கப்போறாள்என்னை

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக முனிவர்கள் அரசர்கள் எல்லாம் வந்து நிறைந்திருக்க அம்பரீஷராஜன் தோழிகளைப்பார்த்துச் சொல்வது.

அம்பரீஷன் சொல் கவி.

என்னிடசெல்விக்கேற்ற எழில்பெருந்தோழிகேளாய்
நன்னயமண்டபத்தில நலமுடன் அரசரெல்லாம்
உன்னிதமாகவந்து உகந்துமே அமர்ந்திட்டார்கள்
இன்னிமிஷத்திலிங்கே ஸ்ரீமதி அழைத்துவாராய்.

ஸ்ரீமதி கடவுளை துதித்து சபைக்கு செல்வது.

தில்லாக்கிரி தில்லாந்திரி என்றமெட்டு.

ஆதிமூலா ஆதிமூலா ஆதிமூலா ஆதிமூலா
சோதிசீலாஎன்னைஇங்கு சோதனையோமூட்டிவைத்தாய்
இனிமையுடன்தினமும்உனை மனமும்செய்யஎண்ணினேனே
முனிவரைநான்மணக்கவென்னமுன்பாதகக்குறைகள்தானோ (ஆ)

நடுங்குதையோஎந்தன்திரேகம் நருமுனிவர்தன்னைஎன்னை
விடமாட்டாரேஎந்தன்தந்தைவிசா என்னசெய்வேன்நேசா (ஆ)

வந்தேன்இந்தவாரணோர்நதி வளரும்மகாசபையில்
சிந்தைநொந்தேன்எந்தன்குறை தீர்த்தருள்வாய்நந்தா (ஆ)

ஸ்ரீமதி தரு அம்பரீஷனிடம் பணிவது.

சரணம்செய்தேன் தந்தையே கருணைவையும்எந்தையே
தருணமதில்முந்தியே சபைநிறைந்தவிந்தையே

அம்பரீஷன் கவி.

வடிவினில்மிகுதியுற்ற மங்கையேஎந்தன்செல்வி
படிபுகழ்அரசரெல்லாம் பார்த்துமேஇருக்கஇப்போ
கெடிபெரும்முனிவருக்கு கீர்த்தியாய்மாலைதன்னை
திடமுடன்ஒருவருக்கு செல்வியேபோடுவாயே.

அம்பரீஷன் வசனம்.

கேளும் குமாரத்தி ஸ்ரீமதியே இந்த இரண்டுமுனிவரில் யாராவது ஒருவருக்கு இந்தமாலையைப்போடும்.

அம்பிகை வசனம்.

ஏ நாதா இவ்வளவு அரசரில் இந்தமுனிகளுக்கு மாலைபோட சொல்லுகின்றீர்.

அம்பரீஷன் வசனம்.

அடிபாவிதோஷி இந்த மகாமுனிவரின் சாபம்வரும் சீக்கிரம் எட்டசெல் ஏ குழந்தாய் மாலைபோடுவாயாக.

ஸ்ரீமதி வசனம்.

ஏ தந்தையே இந்தமுனிகளுக்கு மாலைபோடும்படியாகசொல்லுகின்றீர் ஆ கா இது தர்மமா அரிகரி பரந்தாமா.

அம்பரீஷன் வசனம்.

ஏ குழந்தாய் ஒன்றும்சொல்லாதே சாபம்நேரும்.

ஸ்ரீமதி வசனம்.

ஏ ஆதிநாராயணா பரந்தாமா உனக்கு இது தருமமா மூட்டிவிட்டாயே என்னசெய்வேன் அரிகரி.

அம்பரீஷன் தரு.

ஏதுக்குவிற்கின்றாய்   சொல்லுமாலை
எடுத்துப்போட்டு   கலிவெல்லும்
வாதுகள்செய்யாதீர்   வாயினால்முனிவர்கள்
நீதாசசாபமும்   செப்பியேவிடுவார்(ஏது)

ஸ்ரீமதி தரு.

தந்தையேஎந்தனை   பாரும்நீ
தர்மமோசொல்வது   கூறும்
எந்தையேகாட்டினில்   இருந்துதபம்செய்யும்
விந்தைதிருவரில்   எவரிக்கிடவையும் (தந்)

அம்பிகை தரு.

படுபாவிமுனிவர்கள்   ஏவி இங்கே
பார்க்கவந்தாரேஇவர்   கூவி
தடபுடலாகவே   சடைமுடிதான்பூண்டு
கெடுங்காலமோஇங்கு   கிட்டிவந்தார்கண்டு (படு)

நாரதர் தரு.

பாரும்பாரும்இங்கு   வேந்தாஉந்தன்
பாவைசொல்வதையும்   நேர்ந்தா
கூறும்உந்தன்தேவி   கொற்றவர்எந்தனை
தாறுமாறாகவே   தான்திட்டகிந்தனை (பாரு)

அம்பரீஷன் தரு.

நங்கையேமுனிவர்கள்மேல்   வாது அவர்
நலுஞ்சாபம்தந்தால்பொல்   லாது
செங்கைவடிவழகி   செல்வியேஇன்னம்நீ
இங்கையேஇருக்காதே   இடுவாய்மாலைதன்னை (நங்)

அம்பிகை தரு.

புத்திகள்இல்லையோ   முனிவரோ இப்போ
புறப்படும்நீங்கள்தான்   இனிநேரே
சித்துவித்தைசெய்து   செல்வியைமணந்திட
ஒத்துக்கொள்ளேன்நானும்   ஒருக்காலும்தணிந்திட (புத்)

பர்வதமுனி தரு.

அய்யய்யோ இதுவென்ன இராசனே உந்தன்
அருமையும்மைவகுருள் நேசனே
தையலிப்படிவைதால் சபைதனில்உள்ளவர்
கைகொட்டிநகைப்பாரே கண்டுகொள்ளுயமெள்ள (அய்)

அம்பரீஷன் தரு.

கன்னியேஇங்கே நில்லாதே முனிவர்
கடுஞ்சாபம்தந்தால் பொல்லாதே
இன்னும்ஏன்நிற்கின்றாய் ஸ்ரீமதியாளேநீ
உன்னிமுனிவருக்கு உகந்துமாலைபோடுநீ (கன்)

ஸ்ரீமதி கவி.

தந்தையரேஉங்களுக்கு சண்டைஏனோ
தருந்தமுனிஇருவருமே இவருமல்ல
எந்தையேஇவர்முகம்தான் குரங்கைப்போல
இருக்கின்றதென்னென்று சொல்லுவேன்நான்
சுந்திரமாய்இவர்நடுவில் நீலமேக
சுத்தமுள்ளகைகள்ரெண்டும் முழந்தாள்மட்டும்
அந்தமுள்ளபதினாறு வயததான
அவர்பார்க்கஉங்களுக்கு தெரியாதேனோ.

வசனம்.

கேளும் தந்தையே தாங்கள் சொல்லுகிற இவர்கள் இரண்டு பேரும நாரதபர்வதமுனிகள் அல்ல இவர்கள் முகம் குரங்கைப் போல இருக்கிறது இவாள் நடுவில் ஓர் சுந்திரபுருஷன் நீலமேகசாமள்வர்ணமாக பதினாறுவயததாக இருக்கின்றான் கைகளோ உத்தமபுருஷர்க்கு உள்ளபடி முழங்கால்மட்டும் தொங்குகிறது அந்த புருஷா உங்களுக்கு தெரியவில்லையா தந்தையே.

நாரதர் தரு.

ஆகா அந்த புருஷனுக்கு
பாகாகைகளெத்தனையோ சொல்லுவாய்

ஸ்ரீமதி தரு.

மெய்யா அவர்க்கிரண்டு
கையேஇருக்கின்றது வெல்லுவாய்

பர்வதமுனி தரு.

வாலைமாதே
மாலைகழுத்திலென்ன
பருவமாதே
உரையுமே

ஸ்ரீமதி தரு.

மாலை
சாலபோட்டுமேதானும்
அவர்கழுத்தில்
இருக்குதோ

நாரதர் தரு,

தையலரே
மெய்யாஇருப்பதென்ன
கையினில்
சொல்லுநீ

ஸ்ரீமதி தரு.

நீண்ட
ஆண்டவன்கைதனில்
வில்லுஒன்று
இருக்குதே

பர்வதன் தரு.

நேசா
யீசனுடையமாய்கை
முனிவரேவா
யாருமே

அம்பரீஷன் தரு.

என்றுமில்
எந்தன்மகளுக்காக
லாதமாய்கை
வந்துதே

நாரதர் கவி,

பரமனும்வருகமாட்டார் பார்படைபிர்மன்தானும்
திரமுடன் அவருமல்ல செப்புவேன் அசுரரல்ல
குரங்கின் தன்முகத்தைபோல கொற்றவன்நம்மைசெய்து
அரிதானேவந்தோனாகும் அதற்கொன்றும்தடைதானில்லை.

நாரதர் வசனம்,

கேளும் பர்வதமுனியே பரமசிவன் வருகமாட்டார் பிரமனுமல்ல அசுரரல்ல நம்மை குரங்கின்முகமாகசெய்து அரிதான் வந்திருப்பார் இதற்குதடையில்லை முனியே,

அம்பரீஷன் தரு

விந்தையுள்ளமாமுனிவரேநீர் சிந்தையுங்கலங்குவதேன்
சொல்லுமே இங்கே நில்லுமே

நாரதர் தரு.

நாங்களாமயங்குகின்றோம் . எங்காணும்புத்திஉனக்கு
இல்லையா மகா தொல்லையா

அம்பிகை தரு,

பாவிஇந்தமுனிவர்களும் தாவியேஇவ்விடம்ஏனோ
வந்தாரோ மனம் நொந்தாரோ

பர்வதமுனி தரு.

சரிசரிஉந்தன்மகள்தான் வரிக்கட்டுமேஎங்களை தான்
மன்னவா சொல்ல முன்னவா

அம்பரீஷன் தரு.

சாபமும்வருகாவண்ணம் ஆபத்துக்குவருகாமுன்னமேநீ
போடுவாய் மாலை போடுவாய்

ஸ்ரீமதி தரு.

என்னமாய்குரங்கிதற்கு உன்னிதமாலைபதனை
போடுவேன் மனம் வாடுவேன்

ஸ்ரீமதி கவி.

அர்சர்தன்குலத்துதித்த அழகிலாகுரங்கதற்கா
வரிசையாய்வைத்தாய்நீதான் வரசவாயீசாகல்ல
மூரசகேதனனேவென்று மூர்ச்சையாய்அழுதிருக்க
கரிசைபோற்றோன்றிஅங்கு கன்னியைகாணோம்தானே.

பொது வசனம்,

இந்தப்பிரகாரமாக அரசன் முனிகளுக்கு மாலை போடும்படி யாகசொல்ல ஸ்ரீமதிஇந்தகுரங்குகளுக்கா மாலையிடுவதென்று அழு துக்கொண்டிருக்க அப்போது திடீரென்று ஒரு இருள் தோன்றி ஸ்ரீமதியைகாணோம் இப்படிஇருக்க நாரதர்சொல்வது.

நாரதர் வசனம்.

ஆ கா இதுவென்ன இருள் கண்ணொன்றும் தெரியவில்லையே

பர்வதமுனி வசனம்.

ஆமாம் எனக்கும் அப்படிதான் இருக்கிறது.

அம்பரீஷன் தரு.

அய்யய்யோ இதுவென்ன மோசம் எந்தன்
அருவையைகாணோமே நாசம்
வையகந்தனிலே வன்னமாமகள் தன்னை
மெய்யாககொண்டுமே மேவினோர் ஆர்தானோ

அம்பிகை தரு.

படுபாவிஉன்னாலே மோசம் அப்போ
பார்த்துசொன்னேனேநான் நாசம்
கெடுதோஷியேஇந்த கெட்டமுனிவர்தான்
அடாதவிதமாக அருமாய்கைசெய்தாரே

அம்பரீஷன் தரு.

முனிவர்கள்மேல்பாபம் சொல்லாதே அடி
முண்டையே அவர்சாபம் பொல்லாதே
இனிமையாய்இருக்திட ஸ்ரீமதிதன்னையே
கனிவுடன்சென்றிட்ட காரணமறியேனே

அம்பிகை தரு.

எங்கிருந்துவந்தார் பாவி எந்தன்
இளஞ்செல்விக்குஇவர் மேவி
பொங்குதேமனமது பொல்லாதகாரியம்
நங்கையையெங்குநான் நான்கண்டுதேடுவேன்

சில அரசர் வசனம்.

என்ன என்ன எங்கேவிவாகப்பெண் யாரெடுத்தேகியது எப்படிவந்தார்.

வேறு சில அரசர் வசனம்.

யாரெடுத்து போனார்களோ மாய்கையாகத்தான்காணோம்.

சில அரசர் வசனம்.

யாருக்குத்தான் மாலையிட்டாள் எந்தவீரன் எடுத்தேகினான்.

சில அரசர் வசனம்.

ஆரும்எடுத்தேகவில்லை மாலையிடவும் இல்லை.

சில அரசர் வசனம்.

இதுவெல்லாம் முனிவர்களின் மாய்கைதான்வேறில்லை.

சில அரசர் வசனம்.

அப்படியல்ல அரசன்தான் பத்திரபடுத்திவிட்டான்.

சில அரசர் வசனம்.

வாரும் இனி அவர் அவர் தேசம் செல்லலாம்.

சில அரசர் வசனம்.

சிலநாள் இருந்து எப்படிமுடியும் பார்த்து போகலாம்.

நாரதர் கவி.

நேசனேமுனியேகேளும் நின்னெவமாய்கையெல்லாம்
கேசவனன்றிவேறு கிடையாது உலகந்தன்னில்
பேசியேஇருவருக பூரப்பட்டுவைகுந்தத்தை
வாசமாய்சென்றுநாமும் வண்மையாய்பார்க்கலாமே.

வசனம்.

கேளும் பர்வதமுனிவரே இந்தமாய்கையெல்லாம் மகாவிஷ்ணுவையன்றி வேறில்லை இப்போதே சென்றுபார்ப்போம் வாரும முனியே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக ஸ்ரீமதியைகாணோம் என்று அம்பரீஷன் துக்கித்திருக்க முனிவர்கள் இருவரும் மகாகோபத்துடன் வைகுந்தத்தை நாடிவருகிறபோது வைகுந்தத்தில் விஷ்ணுவானவர் மாய்கையாக ஸ்ரீமதியை எடுத்துவந்துவிட அப்போது ஸ்ரீமதி விஷ்ணுவைப்பார்த்து சொல்வது.

பூமிமெச்சிடுமண்ணுமலைக்கோர்துணை என்ற காவடிச்சிந்துமெட்டு.

ஸ்ரீமதி சொல்.

எனைகார்த்தவனே துயர்தீர்த்தவனே உனை கண்டேன்
துயர்விண்டேன் அருள் கொண்டேன் நான்
எத்தியேஉன்பதம் சாற்றிசையிலென்ன
சொல்லுவேன் கவி வெல்லுவேன்

விஷ்ணு சொல்.

அன்பன்மகிழ்செல்வி உம்பர்புகழ்வல்லி தேருவாய்
மனம்ஆருவாய் முத்தி சேருவாய் என
என்றும்துதித்தால் இன்றவந்தேஅருள்
தந்தேனே மிக்க செந்தேனே

ஸ்ரீமதி சொல்

உந்தன்அருள்கண்டு இன்னம்என்னஉண்டு ஆண்டவா
புகழ்தாண்டவா மாலை பூண்டவா என்னை
விந்தைபாதந்தன்னில் சுந்திரமாய்இப்போ
சேர்ப்பாயே மானம் காப்பாயே

விஷ்ணு சொல்

வஞ்சியேநீதுயர் அஞ்சியேநீமிக்க கொள்ளாதே
மனம்தள்ளாதே இங்கு செல்லாதே அந்த
வன்னமுனிவர்கள் இன்னம்இங்குவர
காட்டுறேன் இன்பம் பூட்டுறேன்

விஷ்ணு வசனம்.

ஏ மாதே பயப்படாதே உந்தன்கோரிக்கைபடிகொண்டுவந்து விட்டேன் அந்த முனிவர்கள் இங்குவருகிறார்கள் மறைவாக இரு வேடிக்கைகாட்டுறேன் பார்,

ஸ்ரீமதி வசனம்.

அப்படியே இதோ மறைந்துகொண்டேன்,

நாரதர் வைகுந்தம்வந்து விஷ்ணுவைப்பார்த்து சொல்வது கவி.

மண்ணதைஉண்டவாயா மலரடிதன்னில்போற்றி
திண்ணமாய்எந்தனோடு திகழ்பர்வதனையுங்கூட
கண்ணுகமோசம்செய்து நலமுடன்மாய்கையாக
பெண்ணதைகொண்டுவந்தீர் பெருமானேசரியிதானோ.

வசனம்,

ஏ பரமமூர்த்தியேஎன்னையும்பர்வதனையும் ஏமாத்திபெண்ணை மாய்கையாக கொண்டுவந்திரா இது ஞாயந்தானோ?

விஷ்ணு வசனம். யார் நானா எடுத்துவந்தேன்.

முனிகள் வசனம். ஆம் நீர்தான் கொண்டுவந்தீர்,

விஷ்ணு தரு.

என்னகாரியம் சொன்னீர் நன்றாயிருக்கிறது
முன்னேசொல்லாதேஇனி பார் பார் பார்

நாரதர் தரு,

அந்தமட்டும்இருக்க எந்தன்முகம்குரங்காய்
வந்தகாரியமென்ன கூர் கூர் கூர்

விஷ்ணு தரு,

கூருவேன்பர்வதனும் நேரில்கேட்டபடி
தேரியேசெய்தேனனும் பார் பார் பார்

பர்வதமுனி தரு,

நாரதாஇருக்கட்டும் சீரதாஎந்தன்முகம்
பாரில்குரங்கானதேன் சொல் சொல் சொல்

விஷ்ணு தரு,

சொல்லுவேன்நாரதன்தான் வல்லவன்கேட்டபடிக்கு
எல்லாமும்குரங்கதாச்சு கில் கில் கில்

நாரதர் தரு.

நாதனேஇந்தபடிக்கு சோதனைசெய்யலாகுமோ
வேதனேஎங்களையுந்தான் நீர் நீர் நீர்

விஷ்ணு வசனம்.

ஏ முனிவர்களே என் ஆயுதத்தை தொட்டு சொல்லுகிறேன் நானுகஒன்றும் செய்யவில்லை நீங்கள் கேட்டபடிக்கி தான்தந்தேன் நான் பக்தருக்கு கட்டுபட்டவனல்லவா.

நாரதர் தரு.

ஆண்டவாசபைதனில்நீண்டவில்லைபிடித்து ஆதிமூலமே
அருவைவையைதெரியாமல்மறைவாய்க்கொண்டதாரோ ஆதிமூலமே

விஷ்ணு தரு.

சாரங்கம்சங்குள்ளசாமியென்றெந்தனை அரியீரோ
சந்திரபுருஷருகைளத்தனை என்று தெரியீரோ

பர்வதமுனி தரு.

கைகளிரண்டென்றுமெய்யாசொன்னாளேதான் ஆதிமூலமே
கருணையுடையவா தெரியாமல்சென்றாரே ஆதிமூலமே

விஷ்ணு தரு.

நான்ஒன்றும்அரியேனேநன்மையுடன்சொன்னேன் முனிவோரே
நாளும்உலகிலுள்ளமாயாவிகாரியாரோ முனிவோரே

நாரதர் கவி.

பத்தவதாரங்கொண்ட பகவான்தன்சொல்லைப்பார்த்தால்
குற்றமேஒன்றுமில்லை கொடும்பாவி அம்புரீஷன்
மெத்தவேதருவதற்கு மெல்லியின்பேச்சைகேட்டு
சுத்தபாய்ஏதோமாய்கை செய்திட்டான்சென்றுபார்ப்போம்.

வசனம்,

கேளும் பர்வதமுனியே பகவான் பேச்சைகேட்டால் குற்றம் இங்கு ஒன்றுமில்லை அம்பரீஷன் தான்பெண்சாதி பேச்சைகேட்டு ஏதோ மாய்கை செய்தான் போய் பார்ப்போம் வாரும் பருவத முனியே.

நாரதர் நொண்டிச்சிந்து.

பர்வதமுனியேகேளும் - அவன் - பத்தினியாள்பேச்சதுவை மெத்தவேகேட்டு -கிர்வமவனும்கொண்டு - பெண்ணை-கிட்டென்று மாய்கையாய் திட்டென்றுசெய்தான்-பாவியவனிடத்தில்-இப்போ- பக்ஷமுடனேசென்று இச்சமையத்தில் -சாபமதுகொடுத்து-நாமும் தந்திரமாய் வந்திடலாம் சுந்திரமதாய் (தத்தன தனந்ததானா.)

முனிவர் கவி.

அடே: அம்பரீஷாசொல்வேன்கேளும் அருவையைதாரோனென்று
சம்பிரமாய்சொல்லியேயும் தாக்ஷிக்குள்ளாக்கியிப்போ
உம்பர்கள்கதைக்கவைத்தாய் உந்தனைபேரிருள்கள்மூடி
கெம்பீரஅரிவும்போயி கெட்டிடசாபந்தந்தேன்.

முனிவர் வசனம்.

அடே: அம்பரீஷா கொடியபாவி நீ பெண்ணைத் தருவதாக சொல்லி எங்களை இங்கே அழைத்து ஏதோமாய்கைசெய்து கண்டவர் நகைக்க வைத்தாய் அல்லவா? ஆகையால் உந்தனை பேரிருள் மூடி உன் அறிவும்கெட்டுப்போக சாபந்தந்தேன் பெற்றுக்கொள் ளும் அம்பரீஷா.

அம்பரீஷன் வசனம்.

ஏ அரிஹரி இதவும் கின்சோதனையா முனிவர்கள்சாபம் நேர்ந்துவிட்டது இனிஎன்னசெய்வேன் பரந்தாமா.

அம்பரீஷன் புலம்புவது தரு.

அப்பப்போஎன்செய்வேன் அரிவாசுதேவனே
ஆண்டவா ஆண்டவா ஆண்டவா
மெய்யாஉனை துதிக்க மேதினியில்குறை
வரலாமோ வரலாமோ வரலாமோ
செல்விபோனதல்லால் நய்யசாபந்தந்தார்
நாறணு நாறணு நாறணு
வல்லமைபோயிது வந்துஎன்னைக்கார்க்க
வருவாயே வருவாயே வருவாயே

அம்பரீஷன் வசனம்.

ஏ பரந்தாமா என்குழந்தை போனதுமல்லாமல்படி இந்த முனிவர்கள் சாபம்வந்ததே கேசவா என்னசெய்வேன்.

அம்பரீஷன் வேறு தரு.

அருமுனிவோர்எனக்கு அடங்காசாபம்தந்தார் ஆதிமூலமே
அருவைபோனதலலால்சிறுமைவந்துநேர்ந்ததே ஆதிமூலமே

அம்பரீஷன் வசனம்.

ஏ அரிவாசுதேவா இப்போஎனக்கு இந்த ஆபத்தவந்துநேர்ந்ததேஎன்னசெய்வேன் நாராயணு முன்காட்டில்ஆபத்துகாலத்தில் கார்ப்பதாக உறுதிசொன்னீரோ ஒர்கால்வருவீரோ.

அம்பரீஷன் தரு.

இந்தவேளைஎன்முன்வந்துகார்க்கவேணும் ஆதிமூலமே
இனிமேல்உயிர்வைத்து இருப்பேனோபுவிமீது ஆதிமூலமே

பொது வசனம்.

இப்படியாக அம்பரீஷன் கடவுளை தியானிக்க கடவுள் அருளால் சக்கரம்தோன்றி முனிவரை தெருத்த முனிவர் ஒடுவது.

நாரதர் தரு.

அய்யோஎன்ன சொல்வேன்மோசம்
அருமுனிபா வதாநேசம்
தப்பலகமக்குவேண்டாம் சக்கரம்தெரித்ததே
வைகுந்தவாசனே வந்தென்னைகார்ப்பாயே

பர்வதமுனி தரு.

இதுவென்னமோசமோ அரியேனே
அய்யோஎனைகூடதெருத்துதே தெரியேனே
சதியிதுவென்னமோ சாரங்கபாணியே
விதியிதுவென்னமோ வேணுவாதாட்புரி

நாரதர் தரு.

ஓடிடும்பர்வத முனியே
ஓகோ கோ தெரிந்துதே இனியே
ஆடிஅரங்கத்தில் நாடிஅமர்ந்தவரி
யாடிஅழைத்திட ஒடிவருவாயே

பர்வதன் தரு.

அரிவாசுதேவனே வாருமேஇந்த
அரியாதோன்செய் பிழைதீருமே
பரிபோல்கெருடனேரி பாத்திடஎனகுரை
சரியென்றுதீர்ப்பாயே சாரங்காபோற்றினேன்

முனிகள் ஓடிவருகிற சமையத்தில் விஷ்ணுசொல் கந்தார்த்தம்.

ஆதிநாராயணர்தான் அருமையாய்கெருடனேறி
சோதிசேர்சக்கரத்தை சத்தமாய்பிடித்துக்கொண்டேன்
கோதிலாநீயும்பக்தன் கொற்றவன்தானும்பக்தன்
தீதிலாஇவைகள்எந்தன்

தரு.

திருவிளையாடலாகுமே இவைகளெல்லாம்
பெருமவிளையாடலாகுமே

அருவைஸ்ரீமதியாள் அநேககாளசகம்மை
பெருந்தபயபுரிந்தோள் பொருப்பீர்பொருப்பீர்மனம்

வசனம்.

கேளும் முனிவர்களே நீங்களும் பக்தர் அம்பரீஷனும் பக்தர் ஆகையால் இந்த திருவிளையாடல் செய்தோம் ஸ்ரீமதி முன்சென்

மாந்திரமுதலாக நம்மையடையும்படி தபம்புரிந்தவள் ஆகையால் நீங்கள் பொறுமையைபூஷணமாக கொண்டவர் அல்லவா பொருத்துக்கொள்ளவேண்டும்.

முனிவர்கள் கந்தார்த்தம்.

எந்தனைஏமாற்றித்தான் இதழுடன்கொண்டுவந்த
அந்தவோர்உருவமாக அம்பரீஷன்குலத்தில்தோன்றும்
சுந்திரதசரதற்கு சுதனுகநீபிறக்க
விந்தையாய்ஸ்ரீமதிதான்

தரு.

விளங்கும் ஜனகன்மகளாய் பிறக்கவேண்டும்
துலங்கும் ஜனகன்மகளாய்
விளங்கபிறக்கவேண்டும் விவாகம்நீசெய்யவேண்டும்
துலங்கும்ராக்ஷதன் தூக்க துக்கம்நீபடவேணடும்

முனிவர்கள் வசனம்.

கேளும் சுவாமி இந்த அம்பரீஷன் குலத்தில் தோன்றும் தசரதற்கு குழந்தையாக நீபிறக்கவேணடும் இந்த ஸ்ரீமதி ஜனகன்மகளாய் பிறக்கவேண்டும் அந்த காலத்தில் இப்போது என்னை ஏமாற்றிக்கொண்டு வந்ததைப்போல ஒரு ராக்ஷதன் உன்னை ஏமாற்றி அந்த பெண்ணை கொண்டு போகவேண்டும் இப்போது நாங்கள் பட்டகஷ்டம் நீபடவேண்டும் இந்த ஒருவரம்தரவேண்டும் சுவாமி.

விஷ்ணு கவி.

பழுதிலாபக்தரேகேள் பகவான்நான்சொல்வேன்இப்போ
அழிவிலாஉங்கள்சொல்லே அதையும்நான்ஒப்புக்கொண்டேன்
வழிமறைதன்னைக்கொண்ட வன்னமாமுனிவேநீங்கள்
செழுமறைதன்னைபோற்றி சென்றுமேவருகுவீரே.

பொது வசனம்.

இந்தப் பிரகாரமாக முனிகள் பகவானிடம் விடைபெற்று செல்லும்போது சபதம்செய்துக்கொண்டது.

நாரதர் பெண்ணை இனிவிரும்பேன் என்றுசொல் கவி.

ஆகமமுணர்ந்தவல்ல அருமுனிவோரோநந்தன்
தேகமுள்ளளவரையில் செய்யேனான்விவாகந்தானே.

பர்வதமுனி சொல் கவி.

போகத்தைத்தருரும்அந்த பொல்லாததன்பமான
விவாகமேசெய்வதில்லை விதுசத்தியம்சத்தியம்தானே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக முனிவர்கள் பகவானிடம் விடைபெற்று போகும்வழியில் இனி நமது தேகமுள்ளளவரையில் விவாகமசெய்துக்கொள்ள எண்ணி பெண்களை விரும்புவதில்லை என்றும் பிரதிக்கினை செய்தார்கள் அது பெருஞ்சங்கடமென்றும் பேசிக்கொண்டார்கள் இப்படி பேசிக்கொண்டே எப்போதும் போல தம்தம் ஆசிரமம்சென்று இருந்தார்கள் அம்பரீஷனும் பகவானது திருவிளையாட்டை எண்ணிவியந்து தன் இராஜ்ஜியத்தை நீதிதவறாமல் ஆண்டுவந்து கடைசியில் மகாவிஷ்ணுவினுடைய உலகம்சென்றான் இந்நாடகத்தை ஆடினபேர்களும் பாடினவர்களும் அன்போடு கேட்டபேர்களும் பரிபூரணதிசைவரை சகலபாக்கியத்துடன் வாழ்ந்து மறுமையில் நித்தியானந்த சுகத்தை அனுபவித்து பெறற்கரிய செல்வமாகிய ஸ்ரீ கண்ணபிரான் பாதகமல செந்தேனையுண்டு வாழ்வார்களாக சுபம் மங்களம் சுபமங்களம் ஜெயமங்களம்.

வாழி விருத்தம்.

ஆனைமாமுகவன்வாழி அருமுகன் அயன்மால்வாழி
மானையேகரத்தில்கொண்ட மாசிவன் உமையும்வாணி
வானவரோடு அம்பு ரீஷனின்வளர் தன் காதை
ஊனமில்லாமல்பாடிஆடி உலகினில்கேட்டோர்வாழி.

வெண்பா.

சித்திவிநாயகன் திருமால்திருவடி
மெத்தப்புவைரும் மேதினியில்-பத்தியுடன்
அம்பரீஷனின் சரிதை அவனியில்கேட்டோர்படித்தோர்
வம்பின்றி வாழ்க வாழ்க.

அம்பரீஷராஜ நாடகம் இரண்டாம்பாகம்

முற்றுப்பெற்றது.

165396.